அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 ஜூன்

மலர்:46 இதழ்:6

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் லில்லிபுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178

முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.


இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளடக்கம்...


1. அதிகரிக்கும் வேலையின்மையும் ! கண்டுக்கொள்ளா? ஒன்றிய அரசும்...
   *தலையங்கம்*....................................4

2. வீட்டின் LPG யை விட தேசத்தில் உள்ள LPG ஆபத்தானது, கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றுகூடி முறியடிப்போம்!
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து*................................5

3. சமத்துவ சமுதாயத்தை நோக்கி பயணம் ................................9

4. மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்................................11

5. மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி..........14

6. வாசகர் கடிதம்...................................15

7. ஓய்வூதியம் சலுகையா, உரிமையா? .......16

8. முறையீடு ......................................18

9. ஜாக்டீ நினைவுகள் ............................20

10. அரசாணை....................................22

11. பயிற்சி வகுப்புகள்.............................24

12. பணி நிறைவு பாராட்டு .....................31

13. அரசாணை....................................33

தலையங்கம்

# அதிகரிக்கும் வேலையின்மையும் ! கண்டுக்கொள்ளா? ஒன்றிய அரசும்...

மத்திய புள்ளியியல் அமைச்சக அலுவலகம் சார்பில் பீரியாடிக் லேபர் ஃபோர்ஸ் சர்வே அமைப்பு மூலம் முதல்முறையாக மாதாந்திர அடிப்படையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 80,000 குடும்பங்களைச் சேர்ந்த 3.8 லட்சம் பேரிடம் நடத்திய ஆய்வில் கடந்த 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான வேலையின்மை விகிதம் 4.9 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது ஏப்ரல் மாதத்தில் 5.1 சதவீதமாக வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது.

வேலைவாய்ப்பின்மைக்கான முக்கியக் காரணிகளில் மக்கள் தொகை பெருக்கம் முதன்மையானது. கல்வியின்மை, தொழிலாளர் சார்ந்த நிறுவனங்களில் முதலீடு குறைவது. வேளான் தொழிலில் உற்பத்தி குறைவதால் அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று வழி இல்லாதது, சிறிய நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு இல்லாமை போன்றவையும் வேலையின்மைக்கு பிற காரணங்களாக உள்ளன.

உயர் கல்வி பயின்றோர் அதிகமுள்ள கேரளம் போன்ற மாநிலங்களில் வேலையின்மை விகிதம் அதிகம் உள்ளது. அதுவே பட்டதரிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ள குஜராத், மகாதராஷ்டிர மாநிலங்களில் வேலையின்மை விகிதம் குறைவாக உள்ளது. உயர்கல்வி பயின்றோர் தங்கள் படிப்புக்கேற்ற பணியை எதிரிநோக்கி காத்திருப்பது. அதிக ஊதியம் தரும் வேலைக்கு மட்டுமே செல்ல வேண்டும் என முடிவுடன் இருப்பது, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வரும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையிலான நவீன துறைகளின் வளர்ச்சியின்மை போன்றவையும் வேலையின்மைக்கு பிற காரணிகளாக அமைகின்றன. மாநில அரசுகளின் கொள்கை முடிவுகளும் கொள்கை வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இல்லாததும் குறைந்தபட்ச ஊதியத்தில் நிரந்தர மற்றும் முழு நேர வேலைவாய்ப்புகளை உருவாக்காததும் காரணமாக உள்ளது.

பொறியியல் பட்டதாரி குறைந்த ஊதியத்தில் சேவைத்துறை தொடர்பான பணியைப் புறக்கணிப்பது. தொழில் துறையில் நவீன இயந்திரங்களின் பயன்பாடு அதிகரிப்பதால் தொழிலாளர்கள் வேலையிழப்பது, சுற்றுலா, உணவகம் மற்றும் விடுதி சார்ந்த தொழிலில் சீசன் இல்லாத நேரங்களில் அதில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் வேலையின்றி இருப்பது, அண்மைக்காலமாக வளர்ந்து வரும் உணவு விநியோகம், போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள முறைசாரா தொழிலாளர்கள் (கிக் தொழிலாளர்கள்), குறைந்த ஊதியம் மற்றும் பணிப்பாதுகாப்பு இல்லாத நிலையில் பணியாற்றுவதும் அவர்களுக்கான முறையான வேலைவாய்ப்பு இல்லாததைக் காட்டுகிறது.

2024-ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையில், செயற்கை நுண்ணறிவு (AI) இந்தியாவில் வேலைவாய்ப்புகளைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடும். அந்தத் தொழில் நுட்பத்தில் உள்ள நல்ல விஷயங்களைப் பயன்படுத்திக் கொண்டு, அதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான அம்சங்களை மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. அண்மையில் மைக்ரோசாப்ட் நிறுவனம் சமீபத்தில் 6000 ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கியதோடு அந்த பணிகளை AI மேற்கொள்ளும் என அறிவித்திருப்பதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நலத் திட்டங்களை செயல்படுத்த, வேலைவாய்ப்பை அதிகரிக்க கொள்கை உருவாக்கம் போன்ற விஷயங்களுக்கு ஆதாரமாக வேலையின்மை புள்ளிவிவரங்கள்தான் உள்ளன. அனைத்து நாடுகளும் குறிப்பிட்ட கால இடைவெளியில் வேலையின்மை புள்ளி விவரங்களை வெளியிடுகின்றன. அமெரிக்கா போன்ற பொருளாதார வல்லமை மிக்க நாடுகள் மாதந்தோறும் வேலையின்மை விவரத்தை வெளியிட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்திய அரசும் வேலையின்மை புள்ளி விவரங்களை மாதந்தோறும் வெளியிடும் முயற்ச்சியாக ஏப்ரல் மாத கணக்கெடுப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அரசின் இந்த நிலைப்பாடு வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்கான முயற்சி என நம்ம முடியவில்லை, ஏனென்றால் கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றவாறு ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்ற உறுதியை காற்றில் பறக்க விட்டதும் மறந்து போகவில்லை. **வேலை வாய்ப்பை உருவாக்குவதில் அல்லது வேலை இழப்பை தடுப்பதில் கொள்கை உருவாக்கம் ஏற்படுத்தாமல் இவ்விஷயத்தில் கண்டு கொள்ளா ஒன்றிய அரசாக இருப்பதையே நிரூபித்து வருகின்றன.**

**ஒன்றிய அரசு கடைபிடிக்கின்ற மக்கள் விரோத ஊழியர் விராத மதவாக கொள்கைக்கு எதிராக மாபெரும் சக்தியை திரட்டி போராட வேண்டிய அவசியம் உள்ளது. அப்படிப்பட்ட போராட்டத்திற்கு வித்திடும் வகையில் ஜீலை மாதம் 9ந்தேதி நடைபெறவுள்ள ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் அனைவரையும் பங்கேற்க வைத்து வெற்றி பெறச் செய்வோம்.**

**- ஆசிரியர்**

# வீட்டின் LPG யை விட தேசத்தில் உள்ள LPG ஆபத்தானது, கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றுகூடி முறியடிப்போம்!

நம்மைப்போன்ற நடுத்தர அரசு ஊழியர்கள் வாழ்க்கையில் அன்றாடம் பல்வேறு போராட்டங்களோடு தான் வாழ்க்கை சென்றுகொண்டிருக்கின்றது. அதிலும், தற்போது ஜூன் மாதம் பல குடும்பங்களில் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்க பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்போம. குறிப்பாக 10வது மற்றும் 12வது முடித்து கல்லூhயில் சேர்க்க தங்களிடம் உள்ள வாழ்க்கை முழுவதிலும் சேர்த்து வைத்துள்ள சேமிப்புகளை, வாழ்க்கையின் லட்சியமாக வாங்கிய சிறிய சொத்துக்களை விற்கவும் தயாராகிக்கொண்டிருக்கின்றோம். எல்லா அலுவலகங்களிலும் எந்த கல்லூரியில் சேர்க்கலாம், எந்த கல்லூரியில் என்ன கட்டணம் வசூலிக்கின்றார்கள் என தங்களுக்கு தெரிந்த தகவல்களை சொல்லி புதிய தகவல்களை கேட்டறிந்துகொண்டிருப்பார்கள். உணவு இடைவேளை, தேநீர் நேரம் உட்பட இதே பேச்சுக்கள் பரிமாறப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அனைத்து தோழர்களும் தங்களது குழந்தைகளை அவர்களுக்கு விருப்பமான துறைகளை தேர்ந்தெடுத்து நல்லமுறையில் பள்ளிகளில், கல்லூரிகளில் சேர்க்க மாநில மையத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**பழைய ஓய்வூதியம் நமது கோரிக்கை, அதை பறிப்பதே ஒன்றிய அரசின் கொள்கை:**

அதே சமயம் தமிழக அரசு கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்த ஒன்பது அறிவிப்புகளில் நமக்கு என்ன பயனாகும் என கணக்கு போட்டுக்கொண்டிருப்போம். ஆனாலும், பென்சன் சம்பந்தமாக மாநில அரசு இன்னமும் ஒரு உத்தரவாதமான தகவல் அளிக்கவில்லையே? 30.09.2025 அன்றுதான் குழு அறிக்கை பெறப்படும் என அறிவித்துள்ளது. ஆனால், அது எப்படிப்பட்ட அறிக்கையாக இருக்கும் என தெரியலையே? என கேள்வி நம்முன் எழுகின்றது. ஆனால், அனைவருக்குமான செய்தி என்னவேனில், எல்லா காலத்திலும் எந்த ஒரு அரசும் கோரிக்கைகளை தானாக முன்வந்து தந்ததாக வரலாறு இல்லை. தொடர் போராட்டங்களும், அதில் அதிகப்படியான ஊழியர்களின் பங்கேற்பும், எந்தவித பாதிப்புகள் வந்தாலும் எதிர்கொள்ளும்; மனவலிமையும், இழப்பைக்கண்டு அஞ்சாத துணிவும்தான் நமது கோரிக்கைகளை பெற்றுத்தந்திருக்கிறது. என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆனால், வடமாநிலங்களில் ஏற்னவே, பழைய ஓய்வூதியம் அறிவிக்கப்பட்டு வந்துள்ள சட்டீஸ்கர், ஜார்கண்ட், ராஜஸ்தான், இமாச்சலபிரதேசம் போன்ற மாநிலங்களின் நிலை என்ன? நாம் அறிவோமா? மேற்கண்ட மாநிலங்களில் பழைய ஓய்வூதியம் அறிவிக்கப்பட்டவுடன், ஒன்றிய அரசு அந்த மாநில அரசுகளிடம் மிகக்கடுமையாக நடந்துகொண்டது. ஒன்றிய அரசை மீறி உங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் அறிவித்தாலும் அதற்காக 2003 முதல் PFRDA நிதி ஆணையத்தில் ஊழியர்கள் மற்றும் அரசின் சார்பாக செலுத்தியுள்ள பல லட்சம் கோடி ரூபாய்களை திருப்பித்தரமுடியாது என அறிவித்துள்ளது. மேலும், ராஜஸ்தான் மாநிலத்தில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள பாஜக அரசு; பழைய பென்சனைத் திரும்பப்பெற்று, மீண்டும் தேசிய (புதிய) பென்சன் திட்டத்தை அமுல்படுத்திட ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. அந்த மாநில அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதியம் பெற தொடர் போராட்டங்களை நடத்தி எப்படிப்பட்ட தியாகங்களை சந்தித்து பெற்றிருப்பார்கள், ஆனால் விடாப்பிடியாக கார்ப்பரேட் நலன் மட்டுமே தனது லட்சியமாக கொண்டு அரசு ஊழியர்கள் மீது சிறிதும் அக்கரையற்ற தன்மையோடு பழைய ஓய்வூதியத்தை திரும்பப்பெற நடவடிக்கை எடுத்துவருகிறது.

**கார்பரேட்டுகளுக்காகவே ஒருங்கிணைந்த ஓய்வூதியம்:**

ஒன்றிய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்தை பற்றி கடந்த மாதங்களில் விரிவாக விவாதித்துள்ளோம். இதில் 23 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் பயன்பெறுவார்கள், மேலும், 90 லட்சம் பேருக்கு நீட்டிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 01.04.2025 முதல் அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. என்னதான் மாற்றம் செய்யப்பட்டாலும் இது பங்களிப்பு ஓய்வூதியத்திட்டமே, 10% நமது ஊதியம் பிடித்தம் செய்யப்படுகிறது. இதில் நாம் எவ்வித உரிமையும் கொண்டாட இயலாது. இத்திட்டத்தில் பணி ஓய்வு நாளன்று பெறப்படும் 40% Commutation என்பது இல்லை. Gratuity இல்லை. பழைய ஓய்வூதியத்தில் 80 வயது, 85 வயது, 90 வயதுகளில் ஓய்வுதிய சதவீதம் உயர்த்தப்படும். ஒருங்கிணைந்த ஓய்வூதியத்தில் அவ்வாறு இல்லை. இதில் கூறப்பட்டுள்ள தொகுப்புகள் (Packages) என்பது ஊழியர்களிடம் பிடித்தம் செய்யும் செய்யும் தொகையை உரியவர்களிடம் அளிக்காமல் பறிப்பதற்கான நடவடிக்கையாகும். புதிய ஓய்வூதியத்திட்டத்தில் மாற்றம் செய்வதற்காக அமைக்கப்பட்ட நிதிச்செயலாளர் திரு.டி.வி. சோமநாதன் குழுவின் அறிக்கையை அனைத்து அமைப்புகளும் புறக்கணித்துவிட்ட நிலையில் அந்தப் பரிந்துரையைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்தை அமுல்படுத்த ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. புதிய ஓய்வூதியத்திட்டத்தில் இதுவரை 99 லட்சத்து 77 ஆயிரத்து 165 ஊழியர்களின் பங்களிப்பில் PFRDA மேலாண்மையின் கீழான தொகை சுமார் 13 லட்சம் கோடியாகும். கார்ப்பரேட் நலன்களுக்காகவே ஒன்றிய அரசு தனது பங்களிப்பாக 4.5% கூடுதலாக அளிக்க முன்வந்துள்ளது. எனவே, பயனளிப்பு பழைய ஓய்வூதியமே நமது கோரிக்கை என அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்த்ரன் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**வெற்று அறிவிப்பாக உள்ள 8 வது ஊதியக்குழு:**

கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் 8வது ஊதியக்குழு மத்திய அரசு ஊழியர்களுக்கு 8 வது ஊதியக்குழு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை ஊதியக்குழுவிற்கான தலைவரும், உறுப்பினர்களும் அமைக்கப்படவோ, அறிவிக்கப்படவோ இல்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிவிட்டு இன்றுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல், வெறும் அறிக்கையாக மட்டுமே உள்ளது. அதேபோல 8வது ஊதியக்குழுவும் வெறும் வெற்று அறிக்கையாக இருந்துவிடக்கூடாது என்பதை எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியுள்ளது. மேலும், கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய மாற்றங்கள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மத்திய அரசும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய மாற்றம் அறிவிக்க வேண்டுமென தற்போது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**தட்டிப்பறிக்கப்பட்ட தொழிலாளர் நலச்சட்டங்கள்:**

கருத்தாலும், கரத்தாலும் உழைக்கின்ற தொழிலாளர்கள் பல்லாண்டு போராடி வென்ற பல்வேறு உரிமைகளை ஒன்றிய அரசு பறித்துவருகிறது. 8 மணி நேர வேலை நேரத்தை 12 மணி நேரமாக அனுமதித்ததன் விளைவாக பல்வேறு மாநிலங்களில் 12 மணி நேரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 44 தொழிலாளர் நலச்சட்டங்கள் தற்போது 4 சட்டங்களாக சுருக்கப்பட்டுள்ளது. இதனால், பணிபுரியும் இடத்தில் நமக்கான உரிமைகள், சமூக பாதுகாப்பு, ஊதியங்கள் போன்றவை கேள்விக்குறியாகும் நிலை உருவாகியுள்ளது. Occupational Safety, Health and Working Conditions Code, 2020 (OSHWC) 8 மணி நேர வேலையை குறிப்பிட்டு தேவை கருதி அதிகப்படுத்திட அனுமதிக்கிறது. ஆனால் இதற்கு முன்பிருந்த 13 தொழிலாளர் நலச்சட்டத்தில் 8 மணி நேர வேலை, வாராந்திர வேலை நேரம், ஓய்வு இடைவெளிகள், கூடுதல் வேலைக்கான உத்திரவாதங்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவையனைத்தும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச

ஊதியம் ஆண்களுக்கு ரூ.242/-ம், பெண்களுக்கு 159/-ம் மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதிப்பகிர்வு:**

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப்பிறகு நடைபெற்ற பட்ஜெட் என்பது முழுக்க முழுக்க கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான பட்ஜெட்டாக உள்ளது. 15வது நிதிக்குழு மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதி ஒதுக்கீடு 42% லிருந்து 41.5% ஆக குறைத்துள்ளது. கடந்த ஏப்ரல்-அக்டோபர் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து புளுவு வரியாக ஒன்றிய அரசுக்கு செலுத்திய தொகை ரூ.23,661 கோடியாகும். ஆனால் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு திருப்பித்தந்த வரிப்பகிர்வு ரூ.2,976 கோடியாகும். இதே காலத்தில் உத்திரபிரதேசம் செலுத்திய தொகை ரூ.18,880 கோடி, உத்திரபிரதேசத்திற்கு திருப்பித்தந்த வரிப்பகிர்வு ரூ.13,089 கோடியாகும். இதுபோன்ற பாரபட்சமான முறையில் வரிப்பகிர்வு ஒன்றிய அரசு செய்து வருகிறது.

**கல்வியை கடைச்சரக்காக்கும் நிதிக்குறைப்பு:**

தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேசிய புதிய கல்விக்கொள்கையில் 6% என வரையறுக்கப்பட்ட கல்வி நிதி ஒதுக்கீட்டை மீறி, வெறும் 0.4% மட்டுமே கல்வி சம்பந்தமான பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒன்றிய அரசின் கல்விக்கு எதிரான கொள்கையாகும். மற்ற அமைச்சகங்களின் மூலம் கல்விச்செலவினங்களையும் சேர்த்தால் கூட 1.02% மட்டுமே என்பது வேதனைக்குரியது. இதனால் இந்தியாவில் ஆராய்ச்சி மாணவர்களுக்கான உதவித்தொகை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. (2019ல்-4,622 மாணவர்கள், 2020ல்-2,247 மாணவர்கள், 2021ல்-927 மாணவர்கள், 2022ல்-969 மாணவர்களாகும்.) நான்கு ஆண்டுகளில் ஆய்வு உதவித்தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 79% குறைந்துள்ளது. இது வருங்கால சந்ததியினரை அறிவியல் சம்பந்தமான முற்போக்கு பாதையிலிருந்து பின்னோக்கி கொண்டுசெல்லும் என்பதை எச்சரிக்கையோடு உணர வேண்டியுள்ளது.

**ஊட்டச்சத்தில்லாத குழந்தைகளும், கேள்விக்குறியாகும் எதிர்கால சமுதாயமும்:**

உலகத்தில் பொருளாதாரத்தில் நான்காவது நாடாக முன்னேறிவிட்டோம் என்று சொல்லும் ஒன்றிய அரசு, முன்னேற்றம் யாருக்கானது என்ற கேள்வி நமக்குள் எழுந்துள்ளது. அவை முழுக்க முழுக்க முதலாளிகளுக்கான முன்னேற்றமாக உள்ளது. நாட்டில் 13.7 சதவீதத்தினர் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் உள்ளனர். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 35.5 சதவீதம் பேர் வளர்ச்சிகுன்றி உள்ளனர். இவர்களில் 18.7 சதவீதத்தினர் எடை குறைவாகவும் உள்ளனர். 2.9 சதவீதம் குழந்தைகள் 5 வயது நிறைவடையும் முன்பே இறந்துவிடுகின்றனர். சரியான கலோரி உணவு உட்கொள்ளாததால் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாததால் வளர்ச்சி குன்றிய குழந்தைகளாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சத்துணவுத்திட்டத்திற்கான, குழந்தைகள் ஊட்டச்சத்துக்கான நிதியை பட்ஜெட்டில் குறைக்கப்பட்டுள்ளது. பட்டினிக்குறைவான நாடுகளின் பட்டியலில் சீனா, ரஷ்யா, குவைத், ஐக்கிய அரபு அமீரகம் உட்பட 22 நாடுகள் உள்ளன. ஆனால் ஒரு சிலை நிறுவ 3000 கோடி, ஒரு ஸ்டேடியம் கட்ட ரூ.800 கோடி, ஒரு கோயில் கட்ட ரூ.5,000 கோடி, பாராளுமன்றம் கட்ட ரூ.971 கோடி, பசு பாதுகாப்பு ரூ.750 கோடி, சமஸ்கிருத மொழி ஆராய்ச்சிக்கு 643 கோடி என பல வழிகளில் செலவு செய்யப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டிற்கு வெள்ளப்பெருக்கிற்கு நிவாரண நிதியாக ஒரு ரூபாய் கூட தர மறுத்துள்ளது.

**போராட்டங்களை ஒடுக்க முயற்சிக்கும் புதிய சட்டங்கள்:**

தேசத்தின் 5% மக்கள் 70% சொத்துக்களை வைத்துள்ளார்கள். 50% மக்கள் 5% மட்டுமே செல்வத்தை வைத்து வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்திய பில்லியனர்கள் ஐரோப்பிய பணக்காரர்களைவிட உயர்ந்துள்ளார்கள். அதே சமயம் வறுமை கடந்த பத்தாண்டுகளில் 17% அதிகரித்துள்ளது. 2018 ஆண்டு லிருந்து 90% குடும்பங்கள் சர்வதேச தரத்தை விட ஏழ்மையான நிலையில்; உள்ளன. UAPA,

PMLA போன்ற சட்டங்கள் மூலம் ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு உரிமைகள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டு முழுக்க, முழுக்க கார்ப்பரேட் வர்க்கத்தின் ஆதரவான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு நிறைவேற்றிவருகிறது. அனைத்து நிர்வாகங்களையும் ஒன்று குவிப்பதன் மூலம் ஒரே நாடு, ஒரே தேர்தல் என இறுதியாக ஒரே அதிகாரம் என்ற இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. BNS (Bharatiya Nyaya Sanhita - 2023) ன் பிரிவு 111ன்படி ஊழியர்கள் கூட்டு நடவடிக்கை, கூட்டுப்புகார்களை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என கூறுகிறது.

சங்க நிர்வாகிகளை ஜாமீனில் வர முடியாதபடி சிறைத்தண்டனை மற்றும் போலீஸ் நடவடிக்கைக்கு வழிவகுக்கிறது. அதே சமயம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜன-விஸ்வாஸ் சட்டத்தின் மூலம் கார்ப்பரேட்/ பெருவணிக முதலாளிகளின் கடனை மற்றும் குற்றங்களை, குற்றமற்றதாக அறிவிக்க தொடங்கியுள்ளது. இதில் ஏற்கனவே, அவர்களுக்கு ஆதரவாக வனச்சட்டம், கொதிகலன் சட்டம், கனிமவளச் சட்டம் உட்பட 41 சட்டங்களின் கீழ் 180 குற்றங்களை, குற்றமற்றதாக்கியுள்ளது. மேலும் 100 குற்றங்களை நீக்கிவிட கடந்த பட்ஜெட்டில் வழிவகுத்துள்ளது. இந்த தளர்வு எளிதாக தொழில் தொடங்கிடவே என காரணம் கூறப்படுகிறது.

**மக்கள் சொத்து கார்ப்பரேட்டுகளுக்கு, நமக்கோ பட்டை நாமம்:**

பொது மக்கள் மீது வரிச்சுமையால் உருவாக்கப்பட்ட முழு தேசிய கருவூலத்தையும் ஒருசில கார்ப்பரேட்டுகளின் தாராளவாத சுரண்டலுக்கு Production Linked Incentive (PLI)ற்கு ரூ.1.97 லட்சம் கோடி, Capax Incentiveற்கு ரூ.76,000; கோடி, Employment Linked Incentiveற்கு ரூ.2லட்சம் கோடி பெரு முதலாளிகளுக்கு வாரிவழங்கிவருகிறது. ஆனால், NMRHEA, பொது சுகாதாரம், கல்வி மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் நிதிச்சுமை காரணமாக நிதி குறைக்கப்பட்டுள்ளது. நாடு சுதந்திரமடைந்த பிறகு நமது வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட சாலைகள், ரயில்வே, விமானப்போக்குவரத்து, துறைமுகம் காப்பீட்டில் 100% அன்னிய முதலீடு, தபால்துறை, பாதுகாப்பு உற்பத்தி, ஆராய்ச்சி, விண்வெளி ஆய்வு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளும், சேவை உள்கட்டமைப்புகளும் தனியார்மயப்படுத்தப்பட்டு வியாபாரப் பொருளாக்கப்பட்டுள்ளது. Minus Developer Operator மூலம் கப்பல்துறை, தொலைத்தொடர்பு, கனிமவளம் ஆகிய துறைகள் இலவசம் போன்று மிக மலிவாக விற்கப்பட்டுள்ளது.

**வீட்டின் LPG யை விட நாட்டின் LPG ஆபத்தானது:**

எனவே, பழைய ஓய்வூதியத்தை மீட்டெடுக்க வேண்டும், குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9,000/- உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊதியமாற்றம் அமைக்க வேண்டும், குறைந்தபட்ச ஊதியமாக ரூ.26,000/-நிர்ணயிக்கப்பட வேண்டும், 8வது ஊதியக்குழு அறிவிப்போடு நின்றுவிடாமல் அக்குழுவை நிர்மாணிக்க வேண்டும், அவுட்சோர்சிங்/ஒப்பந்த நியமனங்களை நிறுத்த வேண்டும், காலிப்பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும், அவ்வாறு நிரப்பிடும்போது ஏற்கனவே உள்ள தொகுப்பூதிய / ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட 11 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய அரசின் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் (Liberalisation, Privatisation, Globalisation) என்ற LPG என்ற கொள்கை மிகப்பெரிய அளவில் தேசத்தை, மக்களை, தொழிலாளர்களை, அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை விவசாயிகளை என அனைத்துதரப்பு மக்களையும் கொள்ளையடிக்கக்கூடிய, கார்ப்பரேட் மற்றும் அந்நிய முதலாளிகளின் நலன் சார்ந்த கொள்கைகளை, நடவடிக்கைகளை முழுமையாக அமுல்படுத்திவரும் ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிராக, பன்முகத் தன்மை கலாச்சாரம் கொண்ட நாடாக மீண்டும் மாறிட நாடு முழுவதும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை 20 கோடி பேர் பங்கேற்கும் ஜூலை 9 அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம். ●

# அரசுப்பணி நிறைவு

*அருத்தது*



## சமத்துவ சமுதாயத்தை நோக்கி பயணம்...!

தோழமைகளுக்கு வணக்கம்

நான் பொதுப்பணித்துறையில் 21.04.1987-இல் **இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தற்போது ஆட்சி அலுவலராக பதவி உயர்வு பெற்று** மதுரை நிலநீர் வட்டம் அலுவலகத்தில் இருந்து (நீர்வளத்துறை) **31.05.2025** அன்று என் அரசுப்பணியை நிறைவு செய்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

என்னுடைய 38 ஆண்டு பணிக்காலத்தில் 36 ஆண்டுகள் தமிழகத்தில் அரசு ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் முதன் முதலில் **வட்டக்கிளை நிர்வாகியாக பொறுப்பேற்று இறுதியாக பொதுச் செயலாளராக** இயக்கப் பணியாற்றி உள்ளேன். அதைத்தொடர்ந்து ஜாக்டோ ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளராகவும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சிப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளேன்.

என்னுடைய அரசு ஊழியர் சங்கப்பணிகளில் பல தலைவர்களுடன் இணைந்து பணி புரிந்த போது அவர்கள் செய்த சங்கப் பணிகளை வியந்து பார்த்து அதனால் ஈர்க்கப்பட்டு இந்த இயக்கத்திற்காக நான் ஏதோ என்னால் முடிந்த பங்களிப்பை செய்திருக்கிறேன். இந்த சமயத்தில் என்னிடமிருந்து சங்கப்பணிகளைப் பார்த்து நாமும் இந்த இயக்கத்திற்கு ஒரு சிறு பங்களிப்பை செய்ய வேண்டும் என்று நீங்கள் மனதில் நினைத்திருப்பின் உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன் .

இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் கடைக்கோடியில் ஊதியம் பெற்றுக் கொண்டு இருந்த தமிழக அரசு ஊழியர்கள் 1984-இல் தொடங்கி நான்கு ஆண்டுகளிலேயே 1988-போராட்டத்தின் மூலம் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெற்றுக் கொடுத்த அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

இப்போது அரசு ஊழியர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் உரிமைகள் பல இந்த அமைப்பு இல்லாமல் இருந்திருந்தால் அதிகார வர்க்கத்தாலும் அரசாங்கத்தாலும் எப்போதோ பறிக்கப்பட்டிருக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை போராடி பெறுதல், போராடிப் பெற்ற உரிமைகளை காத்தல், இழந்த உரிமைகளை போராடி மீட்டல், தொடர்ந்து போராடுதல் போன்ற பல்வேறு விதமான நோக்கங்களுக்காக தொடங்கப்பட்ட அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். அந்த நோக்கம் இன்று வரை நிலைநிறுத்தப்பட்டு கொண்டிருக்கிறது என்பதிலும் அந்த நோக்கத்தினை நிலை நிறுத்திட முன்னோடி போராளிகளுடன் நானும் ஒரு சிறு பங்களிப்பை செய்திருக்கிறேன் என்கின்ற மன நிறைவும் இந்த அரசு பணி நிறைவு நாளில் எனக்கு இருக்கின்றது .

ப
ணி
நி
றை
வு

# சமத்துவ பயணம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கிய ஆசான் தோழர் எம்.ஆர்.அப்பன். அவரைத்தொடர்ந்து நான் வியந்து பார்த்த பல தலைவர்களுள் என் மனதில் நீங்காத இடம் பெற்ற ஒப்பற்ற - என்னை உத்வேகப்படுத்தியவர்கள் தோழர் ஆர்.முத்துசுந்தரம், தோழர் பி.கிருஷ்ணன் இவர்களுடன் சேர்ந்து இயக்கப் பணிகள் செய்திருக்கிறேன் என்று நினைக்கின்றபோது பெருமையாக இருக்கின்றது.

நமது முன்னோடி தோழர்கள் கட்டியிருக்கின்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்கின்ற எஃகு கோட்டையை மிக கம்பீரத்துடன் கொண்டு செல்ல தலைவர்களும் முன்னணி தோழர்களும் உள்ளார்கள் நிச்சயம் அந்த பொறுப்புகளை தாங்கள் ஏற்றுக்கொண்டு இயக்கத்தை இன்னும் வீரியத்தோடு கொண்டு செல்வார்கள் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு. மேலும், பல புதிய சிந்தனைகளுடன் சங்கத்திற்கு வந்து பங்காற்றிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் செயல்பாடுகள் உத்வேகம் அளிப்பதாகவே உள்ளது.

நான் இந்த இயக்கத்தில் சிறப்பாக செயல்படுவதற்கும் சங்க செயல்பாடுகளுக்கு சிக்கல் எழும்போது எனக்கு சரியான திசையை காட்டி சங்கத்தை சிறப்பாக வழி நடத்திட உதவிய என்னுடன் இத்தனை ஆண்டு காலமும் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் பெருமைக்காகவும் உடன் நின்ற தோழர்கள் அனைவருக்கும், துறைச்சங்க தோழமைச் சங்க, மாநில, மாவட்ட, வட்ட, முன்னணி தோழர்களுக்கும் நான் பணிபுரிந்த நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து ஊழியர்களுக்கும் உங்களுடன் பயணித்த 38 ஆண்டுகள் என் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுள்ளது என்பதை தெரிவிப்பதில் பேருவுகை கொள்கிறேன்.

என் சங்கப் பணிகளில் சங்கம் எடுத்த முடிவின் அடிப்படையில் போராட்டக்களத்தில் உறுதியோடு நின்று போராட்டக் களத்தை சந்தித்து சிறைச்சாலை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எதிர்கொண்டு மீண்டும் நமது சங்கத்தின் போராட்டம் மூலம் ரத்து செய்யப்பட்டு தொடர்ந்து இயக்கப் பணியை இடைவிடாது செய்து வந்துள்ளேன்.

**2025 மே 31 அரசு பணி நிறைவு செய்ய உள்ளேன். என் பணிக்காலத்தில் சந்தித்த அனைத்து உயர் அதிகாரிகள், அரசு ஊழியர், துறைச்சங்க, தோழமைச் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், சகதோழர்கள் அனைவருக்கும் பணி நிறைவு நாளில் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன். நான் ஒரு அரசு ஊழியனாக இந்த இயக்கத்தில் இருந்து விடைபெறுகிறேன்.**

**என் வாழ்நாள் முழுவதும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் சமத்துவ சமுதாயத்தை நோக்கிய பயணங்களில் சந்திப்பேன்..**

நன்றி



என்றும் அன்புடன்

**ஆ. செல்வம்**

மேனாள் பொதுச்செயலாளர் – தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
மாநில ஒருங்கிணைப்பாளர் – ஜாக்டோ ஜியோ
தேசிய செயற்குழு உறுப்பினர் – அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்
மாநிலத் தலைவர் – தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சிப்பணியாளர் சங்கம்

***வியர்வை சிந்தாத உன்னாலும்,***
***மை சிந்தாத பேனாவாலும்***
***எதையும் சாதிக்க முடியாது*** - சேகுவேரா

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
|---|---|---|
| **மு.பாஸ்கரன்** | | **மு.சீனிவாசன்** |
| மாநில துணைத் தலைவர்கள் | மாநிலப் பொருளாளர் | மாநிலச் செயலாளர்கள் |
| **சி.பரமேஸ்வரி** | **சா.டானியல் ஜெயசிங்** | **வே.விஜயகுமரன்** |
| **தெ.வாசுகி** | துணை பொதுச் செயலாளர்கள் | **சு.வளர்மாலா** |
| **மு.செல்வராணி** | **வெ.சோமசுந்தரம்** | **க.நீதிராஜா** |
| **ஆ.அம்சராஜ்** | **அன்னா.குபேரன்** | **செ.பிரகாஷ்** |
| **தே.முருகன்** | **கே.மகாலிங்கம்** | **ஆ.ஜெசி** |
| **ச.தினேஷ்** | **ஆ.ரெங்கசாமி** | **இ.மைக்கேல் லில்லி புஷ்பம்** |


**நாள்:31.05.2025**

**அன்பார்ந்த தோழர்களுக்கு வணக்கம்,**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 31.05.2025 அன்று மதுரையில் மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கடந்தகால நடவடிக்கைகள் மற்றும் ஸ்தாபனம் சம்பந்தமாகவும் விவாதிக்கப்பட்டது.

**உறுப்பினர் சந்தா இயக்கம்:**

கடந்த 19.04.2025 அன்று கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி உறுப்பினர் சந்தா மே 31க்குள் நிறைவு செய்வது என்பது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது வரை 42662 உறுப்பினர் சந்தாக்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதில் பலவீனம் உள்ளது. மாவட்டங்களில் உறுப்பினர் சந்தா இயக்கம் நடத்தி ஸ்தாபன விரிவாக்கம் மேற்கொள்ள நாம் அனைவரும் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**அரசின் அறிவிப்புகளும் நமது கோரிக்கைகளும்:**

அரசு ஊழியர் கோரிக்கைகளை தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ சார்பாகவும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும் தொடர்ந்து போராடிவரும் நிலையில் மாநில அரசிடம் நிதியில்லை என தொடர்ந்து காலதாமதம் செய்து வந்த தமிழக அரசு, நமது விடாப்பிடியான தொடர் போராட்டங்களின் விளைவாக கடந்த 28.05.2025 அன்று 01.10.2025முதல் ஈட்டியவிடுப்பு சரண் செய்வது, 01.01.2025 முதல் 2% அகவிலைப்படி உயர்வு, பண்டிகை முன்பணம் ரூ.20,000 ஆக உயர்வு, கல்வி முன்பணம் ரூ.50,000/- மற்றும் 1,00,000 ஆக உயர்வு, திருமண முன்பணம் 5,00,000/-ஆக உயர்வு, அரசுப்பணியில் உள்ள பெண் ஊழியர்களின் மகப்பேறு 12 மாத விடுப்பை தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்வது மற்றும் ஓய்வூதியம் சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழு அறிக்கையை 30.09.2025க்குள் பெறுவது உள்ளிட்ட ஒன்பது அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. அடுத்த நாள் (29.04.2025) ஜாக்டோ-ஜியோ சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்தித்து அறிவிப்புகளுக்கு வரவேற்பும், நிலுவைக் கோரிக்கைகளான காலமுறை ஊதியம் வழங்கிடவும், கருணை அடிப்படை நியமனத்தை திரும்ப 25%ஆக வழங்கிடவும், பதவி உயர்வு முரண்பாடுகள், ஊதிய உயர்வு முரண்பாடுகள், காலிப்பணியிடங்களை நிரப்பிடவும் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும், அரசின் அறிவிப்புகள் நமது போராட்டங்களால் கிடைக்கப்பெற்றவை என்பதை ஊழியர்களிடம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

**கட்டிட புணரமைப்பு நிதி வசூல்:**

மாநில மையக்கட்டிடம் புணரமைப்பு பணிகள் சம்பந்தமாக கடந்த காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டு அதற்கான பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. அதற்கான ரசீது புத்தகங்களும், நோட்டீஸ் பிரதியும் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் நிதிவசூலில் கூடுதல் முயற்சி தேவைப்படுகிறது. கட்டிட புணரமைப்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இம்மாத இறுதிக்குள் முழுமையாக பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே, அதற்கேற்றவாறு நிதி வசூல் இலக்கை நிறைவு செலுத்திட வேண்டும்.

**நிதி நிலுவைகள்:**

நிதி நிலுவைகள் மிகவும் கவலையளிக்கக்கூடியதாக உள்ளது. டைரி நிலுவைகள் ரூ.23,34,420/- உள்ளது. பயண மற்றும் இதர நிலுவைகள் ரூ.74,755/- உள்ளது. மாநில மாநாடு விளம்பர நிலுவைகள் ரூ.12,000/- உள்ளது. பூமிப்பந்து சந்தித்திராத போராட்டங்கள் நிலுவை ரூ.16,000/- உள்ளது. எனவே, மேற்கண்ட நிதி நிலுவைகளையும் சேர்த்து இம்மாத இறுதிக்குள் நிறைவுசெய்திட முயற்சியெடுக்க வேண்டும்.

**கருத்தரங்கம் மற்றும் பயிற்சி வகுப்புகள்:**

மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளிலிருந்து நாம் பாதுகாத்திட மாவட்ட, வட்ட செயல்பாடுகளில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. நிர்வாகிகள் முழுமையாக செயல்படுவதை உறுதிப்படுத்திட வேண்டும். மாநில செயற்குழு மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் சம்பந்தமாக மாவட்டங்களில் வட்ட, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு நடத்தப்படும் கூட்டங்களில் எழுத்துபூர்வமாக அறிக்கை வைத்து விவாதிக்கப்பட்டு, முடிவுகள் எழுத்துபூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டும். நிர்வாகிகளிடையே கூட்டு செயல்பாடு, வேலைப்பங்கீடு, தோழமை உணர்வு, சங்க அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு கறார்தன்மையோடு செயல்படுவது, துறைவாரிச்சங்கங்களை ஒருங்கிணைப்பது, ஸ்தலப்பிரச்சனைகளை கையிலெடுப்பது போன்றவற்றில் பெரும் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. எனவே, மாவட்டங்களில் பயிற்சி வகுப்புகளை மாவட்டங்களில் நடத்திடுவது. குறிப்பாக கடந்தகால வரலாறுகள் மட்டுமல்லாமல், தலைமைப்பண்புகள், ஊழியர்களை ஒருங்கிணைப்பது, ஸ்தாபன விரிவாக்கம், கோரிக்கைகள் மற்றும் அரசின் கொள்கைகள், அரசுகளின் நிலைபாடுகள் உள்ளிட்ட கருத்துக்களை உறுப்பினர்களிடையே கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட தலைப்புகளில் கடந்த 2003 வரலாற்று சிறப்புமிக்க எஸ்மா போராட்டத்தை ஊழியர்களிடையே கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. அதன் வலிமையே தற்போதைய போராட்டங்களுக்கும், ஸ்தாபன கட்டமைப்பிற்கும் உரமாக அமையும்.

**NHIS மருத்துவ காப்பீட்டு திட்டம்:**

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் Cashless மருத்துவக்காப்பீட்டு திட்டம் இம்மாத இறுதியில் நிறைவடைகிறது. ஜூலை மாதம் புதிய மருத்துவக்காப்பீட்டு திட்டம் அமுலுக்கு வருகிறது. இந்நிலையில் கடந்த 15.05.2025 அன்று கருவூலக்கணக்குத்துறை ஆணையர் அவர்களைச் சந்தித்து மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள பிரச்சனைகள், மருத்துவமனைகளில் நடைபெறும் முறையற்ற மருத்துவ செலவின நிர்ணயிப்புகள், சிகிச்சைக்கு செல்லும் ஊழியர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகள் உள்ளிட்ட குறைபாடுகளை களைந்து முழுமையான Cashless Treatment ஐ உறுதிப்படுத்திட வேண்டுமென கோரிக்கை கொடுத்து பேசப்பட்டது.

**09.07.2025 - அகில இந்திய வேலைநிறுத்தம்:**

அரசு ஊழியர், ஆசிரியர்களின் நிலுவைக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ அமைப்பு தொடர்ந்து போராடிவருகிறது. இந்நிலையில் ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கையை கொள்கைகளுக்கு எதிராக INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC உள்ளிட்ட அனைத்துத் தொழிற்சங்கங்களும் கடந்த 18.03.2025 அன்று டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தேசம் காக்கும் வேலை நிறுத்தமாக நாடு முழுவதும் ஜூலை 9 ஆம் தேதி நடைபெறவுள்ள (பாரத் பந்த்) அகில இந்திய வேலை நிறுத்தத்தில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்திட மாவட்டங்களில் பிரச்சார இயக்கங்களை நடத்திட வேண்டும். மேலும், தமிழக வரலாற்றில் ஜாக்டோ-ஜியோ அமைப்பும் இந்த அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பங்கேற்க முடிவெடுக்கப்பட்டது.

## முடிவுகள்

1. 02.06.2025 முதல் 13.06.2025 வரை உறுப்பினர் சந்தா இயக்கம் மாநில நிர்வாகிகள் பங்கேற்போடு நடத்திடுவது. ஜூன் மாத இறுதிக்குள் உறுப்பினர் சந்தா இலக்கை நிறைவு செய்வது.
2. வட்ட, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டங்களை கூட்டி செயல்பாடுகளை உறுதிப்படுத்தி அறிக்கை மாநில மையத்திற்கு அனுப்பிடவும்.
3. ஜாக்டோ-ஜியோ முடிவின்படி ஜூன் மாதம் இரண்டாவது மற்றும் மூன்றாவது வாரத்தில் மாநில நிர்வாகிகள் துவக்கிவைத்து **அரசின் அறிவிப்புகளும், நமது கோரிக்கைகளும்** பிரச்சார இயக்கத்தை எழுச்சியோடு நடத்திடுவது.
4. கட்டிட புணரமைப்பு நிதி ரசீது புத்தகங்களை பயன்படுத்தி கட்டிட புணரமைப்பு நிதி மற்றும் நிதி நிலுவைகளை ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்வது.
5. மாவட்ட அளவில் ஜூலை 2 எழுச்சிநாள் கருத்தரங்கம் நடத்திட வேண்டும்.
6. 16.06.2025 அன்று மாவட்டத்தலைநகரங்களில் மாவட்ட கருவூல அலுவலர் மூலமாக கருவூலக்கணக்குத்துறை ஆணையருக்கும், மாவட்ட ஆட்சியர் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் NHIS ஊழியர் நலன் சார்ந்த Chashless Treatment என்பதை உறுதிப்படுத்திட பெருந்திரள் முறையீடு நடத்திட வேண்டும்.
7. 09.07.2025 அன்று ஒருநாள்அகில இந்திய வேலைநிறுத்தத்தை வெற்றியடையச்செய்ய வேண்டும்.
8. சேலம் மாவட்டம் பூச்சியியல் துறை ஊழியர்களின் பழிவாங்கும் மாற்றுப்பணி ஆணையை ரத்து செய்திட மாநில மையம் தொடர் முயற்சியெடுப்பது, மாவட்டத்தில் புச்சியியல் அலுவலர் ஊழியர் விரோத போக்கை மீண்டும் கடைபிடித்தால் மாவட்ட அளவில் இயக்க நடவடிக்கை எடுத்திட முடிவெடுக்கப்பட்டது.

பொதுச்செயலாளர்.

கட்டுரை


# மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி

**- பெரணமல்லூர் சேகரன்**

சோவியத் புரட்சியை முன்னெடுத்துச் செல்லவும், புரட்சிக்குப்பின் அதனை அரண்போல் காத்திடவும் தன் எழுத்துக்களையே ஆயுதமாக்கி புரட்சிப் படையின் முன்னணியில் நின்றவர் மக்சிம் கார்க்கி.

மக்சிம் கார்க்கி என்றவுடன் நம் நினைவிற்கு வருவது தாய் நாவலும் அவருடைய சிறுகதைகளும், நாடகங்களுமே. ஆனால், 1901ல் அவர் எழுதிய 'புயல் பறவையின் பாடல்' (The Song of Stormy Petrel) எனும் கவிதை மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. புரட்சியைப் புகழ்ந்து பாடிய இக்கவிதையை லெனின் மிகவும் பாராட்டினார். ரொமனாவ் வம்சத்தைச் சேர்ந்த ஜார் மன்னர்கள் ரஷ்யாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள். கருத்துச் சுதந்திரம் முற்றிலும் பறிக்கப்பட்டிருந்தது. மன்னராட்சிக்கு எதிராகக் குரலை உயர்த்தியவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளானார்கள்.

மேற்கத்திய இலக்கிய வடிவங்களில் ஒன்று அலிகரி (Allegory) எனப்படுவது. இலைமறை காயாக விஷயத்தைச் சொல்லுவது. மேலெழுந்தவாரியாக ஓர் அர்த்தத்தையும், அதனடியில் பிறிதொரு அர்த்தத்தையும் தரும் படைப்பாகும். பெரும்பாலும் அரசியல் விஷயங்கள் எழுதுவதற்குப் பயன்பட்ட இவ்வடிவம் மக்சிம் கார்க்கிக்குக் கைகொடுத்தது. இருப்பினும் கவிதை வெளிவந்ததும் கார்க்கி கைது செய்யப்படுகிறார். கவிதையைப் புரிந்து கொள்ள முடியாத அதிகார வர்க்கம் குழப்பமடைகிறது. கார்க்கியை விடுவித்துவிட்டு கவிதையை மட்டும் தடை செய்கிறது. 1902ல் ஜெர்மனியிலிருந்து கவிதை வெளியிடப்படுகிறது. அப்படி என்னதான் அந்த கவிதையில் இருந்தது?



ஒரு பனிக்கால பகல் பொழுதில் கவிஞன் ஜன்னலருகே அமர்ந்துள்ளான். ஜன்னலுக்கு வெளியே விதவிதமான கடற் பறவைகள் திரிந்த வண்ணமிருக்கின்றன. அவைகளின் உரையாடலை கவிஞன் ஒட்டுக் கேட்கிறான். பறவைகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். காக்கைகள், ரெவன், புல்ஃபின்ச் போன்ற பெரிய பறவைகள் எல்லாம் அதிகார வர்க்கமாம்; பீட்ரெல், மிஷ்கின், குருவிகள் போன்ற சிறு பறவைகள் எல்லாம் புரட்சியாளர்களாம். இந்தக் கூட்டத்தில் வடதுருவப் பறவைகளான பென்குயின்களும், தென்துருவப் பறவைகளான லூன்களும் காணப்படுகின்றன. துருவங்கள் தாண்டியிருக்கும் இவ்விரு இனங்களும் ஒன்றிணைந்து காணப்படுவதற்கு சாத்தியமேயில்லை. ஆனால், கவிஞனின் கற்பனைக்குதான் எல்லையில்லையே. ஒரு குட்டி மிஷ்கின் பறவை தான் கேட்ட பாடல் ஒன்றை சுவைபடக்



ஜூன்18-மக்கள் எழுத்தாளர் மக்சிம்

கூறுகிறது. மற்ற பறவைகள் எல்லாம் மெய் மறந்து கேட்கின்றன. ஜன்னலுக்குப் பின்னால் அமர்ந்து ஒட்டுக்கேட்கும் கவிஞனுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கிறது. புயலினும் வேகமாகப் பறந்து கொண்டே குட்டிப் பீட்ரெல் பறவை புரட்சியை வரவேற்றுப் பாடுகிறது. வரவிருக்கும் புரட்சியை தன் உரத்த குரலால் முன்னறிவிப்பு செய்கிறது. அதிகார வர்க்கத்திற்கு, ஜார் மன்னரின் எதேச்சதிகாரிகளுக்கு இப்பாடல் பிடிக்கவா செய்யும்? தடை செய்ய மாட்டார்களா என்ன?

இதோ! அந்தப் பாடலின் சாராம்சம். ‘கடல் பரப்பு கொந்தளித்து காணப்படுகிறது. வலிய காற்று வீசுகிறது. கருமேகங்கள் விரைந்து செல்கின்றன. கடலுக்கும், கருமேகங்களுக்கும் இடையில் பீட்ரெல் பறவை எந்த பயமுமின்றிப் பறக்கின்றது. உயர, உயரச் செல்கின்றது. மேகத்தை கிழித்துக் கொண்டு வரும் மின்னலெனத் தென்படுகிறது. வரவிருக்கும் புயலை உணர்த்துகிறது. பீட்ரெல் பறவையின் உரத்த குரல் மேகக் கூட்டத்தினிடையே அதிருகிறது. பறவையின் குரலில் வெற்றியின் பெருமிதம் தொனிக்கிறது. பிரமிக்க வைக்கும் துணிச்சல். பெரிய பறவைகள் எல்லாம் கடலின் சீற்றத்தைக் கண்டு அஞ்சி வெளிவரத் தயங்குகின்றன. லூன் பறவை காற்றின் வேகத்தைப் பார்த்து மிரளுகிறது. பெரிய பென்குயின் பறவைகள் பாறைகளுக்குள் பதுங்குகின்றன. ஆனால், எதற்கும் அஞ்சாமல் பீட்ரெல் பறவை மட்டும் பாடிக் கொண்டே பறக்கிறது. இடி, மின்னல், கடலின் சீற்றம் இவைகளையெல்லாம் துச்சமென மதித்து பீட்ரெல் பறவை ஆனந்தமாகப் பாடுகிறது. வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில் உயர உயரப் பறக்கிறது. மேகங்களால் சூரியனை மறைத்துவிட முடியாது என்பதை உறுதியாக நம்புகிறது. புரட்சி நிச்சயம்; வெற்றி நிச்சயம் என்று ஆனந்த நடனமிடுகிறது.

இந்தப் பாடல் போல்ஷ்விக்குகளுக்கு உற்சாகம் அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனாலேயே இப்பாடலுக்காக கார்க்கி கைது செய்யப்பட்டார். இதனாலேயே லெனின் இந்தப் பாடலைப்பெரிதும் விரும்பினார். சோவியத் ஆட்சியும் மலர்ந்தது. மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி 1936ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் காலமானார்.

*(ஜுன்18-மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி நினைவு நாள்)* ●

# வாசகர் கடிதம்

**– கா. பால் பாண்டி**

மே மாத அரசு ஊழியர் இதழில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 42 ஆம் ஆண்டு அமைப்பு தினத்தை எழுச்சியாக கொண்டாடுவோம் கட்டுரை மிகவும் அருமை. 1947 முதல் அரசு ஊழியர் கடந்து வந்த பாதை, சந்தித்த போராட்டங்கள், எதிர்கொண்ட அடக்கு முறைகள், பெற்ற உரிமைகள், பறிக்கப்பட்ட உரிமைகள், ஆட்சியாளர்கள் மனநிலை, ஊதியக்குழுவில் இழைக்கப்பட்ட அநீதிகள், அலுவலகத்தில் இருந்த சாதிய பாகுபாடு, பழிவாங்குவது, பழி ஆக்கப்பட்ட ஊழியர்கள், உள்ளிட்ட பல்வேறு தகவல்களின் தொகுப்பு. அனைத்து நிர்வாகிகள் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய கடிதம். அனைத்து ஊழியர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டிய கட்டுரை. பொதுச் செயலாளருக்கு வாழ்த்துகள். நன்றி.

ஒப்பந்த முறை என்ற நவீன சுரண்டலை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும். தோழர் ஆறுமுக நயினார் கட்டுரை தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் ஒப்பந்த முறையில் பணி நியமன தமிழ்நாடு அரசு அதி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மாண்புமிகு நீதியரசர்கள் சரியான சவுக்கடி கொடுத்தது வரவேற்க தக்கது. ஆனால் அரசு தொடர்ந்து பல நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் செயல் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது வருத்ததக்கது. இனியாவது அரசு ஒப்பந்த முறையில் நியமனங்களை ரத்து செய்து காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்ய வேண்டும். கட்டுரை பயனுள்ளது. அனைத்து கட்டுரைகளும் அருமையாக உள்ளது. ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று படிக்க வைக்க வேண்டும். ●

# ஒய்வூதியம் சலுகையா, உரிமையா?

"நீங்க வேலை செய்த காலத்தில் உங்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது. ஓய்வுபெற்ற பிறகு இப்போது எந்த வேலையும் செய்வதில்லை. பிறகு ஏன் உங்களுக்கு இப்போதும் சம்பளம் (ஓய்வூதியம்) கொடுக்க வேண்டும்?

இப்படி ஒரு கேள்வி ஒரு சிலரால் அவ்வப்போது எழுப்பப்பட்டு வருகிறது. முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசும். அதற்கு முந்தைய பாஜக 2 அரசும், தற்போதைய பாஜக அரசும், ஓய்வூதியத் திட்டத்தைச் சீரழிப்பதற்குச் சொல்லி வரும் புளுகுகளைக் கேட்டுக்கேட்டுத்தான் ஒரு சிலர் இப்படிப் பேசி வருகிறார்கள்.

"ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. இதனால் அரசுக்கு நிதிச்சுமை அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே, எதிர்காலத்தில் ஓய்வூதியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்று முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசின் நிதியமைச்சர் ப.சிதம்பரம் திருவாய் மலர்ந்தருளினார்.

இதே காரணங்களைச் சொல்லி, இதற்கு முந்தைய பாஜக 2 அரசின் நிதியமைச்சர்கள் யஷ்வந்த் சின்ஹாவும், ஜஸ்வந்த் சிங்கும் புதிய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வந்தனர் தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள பாஜகவின் மோடி அரசு ஓய்வூதியச் சட்டத்தில் பல்வேறு நாசகரமான திருத்தங்களைச் செய்து முடிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது.

தங்களின் செயல்களை நியாயப்படுத்துவதற்காக இவர்கள் அவிழ்த்துவிடும் பொய்யுரைகளை ஊடகங்கள் வழியாக அறியும் போதுமக்களுக்கு - ஏன். நமக்கே கூட ஓய்வூதியம் என்பது அரசின் கருணையால் தரப்படும் சலுகைதானோ என்று சந்தேகத்தை ஏற்டுத்தி விடுகிறது. அந்த அளவுக்கு. ஓய்வூதியம் என்பது சலுகையாகவே சித்தரிக்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியம் என்பது உழைப்பாளிகளின் உரிமையே சலுகையல்ல என்பதுதான் உண்மை. எப்படி?

ஓய்வூதியம் பிறந்த கதை

ஓய்வூதியம் என்பது போராட்ட நெருப்பில் விளைந்த உழைப்பாளர்களின் உரிமையாகும். 200 ஆண்டுகளுக்கு முன்னால், 1789-99களில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் போது, அந்நாட்டுத் தொழிற்சங்கங்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முதன்மையானது ஓய்வூதியக் கோரிக்கை. உலகில் ஓய்வூதியத்திற்காக எழுப்பப்பட்ட முதல் குரல். எனினும் அந்த வேளையில் இந்தக் கோரிக்கை வெற்றி பெறவில்லை. தொழிற்சங்கங்கள் மீண்டும் இக்கோரிக்கையை 1890ல் முன் வைத்துப் போராடியதன் விளைவாக 1908ல் ஓய்வூதியக் கோரிக்கையை வென்றெடுத்தார்கள்.

மேலும், ஜெர்மனியில் ரகசியமாகச் செயல்பட்டு வந்த சோஷலிஸ்ட்டுகளின்

(கம்யூனிட்டுகளின்) தொடர்ந்த ஓய்வூதியம் நிர்ப்பந்தங்களின் விளைவாக ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டத்தை ஜெர்மனி அரசு 1889ல் நிறைவேற்றியது. உலகில் முதன்முதலாக ஓய்வூதியத்திற்கென சட்டம் இயற்றிய நிகழ்ச்சி இதுதான் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு பிரிட்டனிலும், மெல்ல மெல்ல ஏனைய பிற நாடுகளிலும் ஓய்வூதியம் சட்டமாக்கப்பட்டது. நமது இந்தியாவில், பிரிட்டிஸ்ஷார் ஆட்சிக் காலத்தில் 1881ல் முதன்முறையாக அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போதைக்கு இந்த வரலாறு போதும் விஷயத்திற்கு வருவோமா!

கொடுத்ததைத் திரும்பப் பெறுவதே

எடுத்துக்காட்டாக, நமது இந்திய நாட்டை எடுத்துக் கொள்வோம். நீர், நிலம், காற்று ஆகியவை தவிர ஏனைய அனைத்துச் செல்வங்களையும் உருவாக்கியது நமது நாட்டின் அனைத்து உழைப்பாளி மக்கள்தான்.

செல்வங்கள் என்றால்...

இதோ, மார்க்ஸ் கூறுகிறார்.

"முதலாளித்துவப் பொருள் உற்பத்திமுறை நிலவுகிற சமுதாயங்களின் செல்வம், சரக்குகளின் பெருந்திரட்டலாகக் காட்சியளிக்கிறது" அதாவது உழைப்பாளி மக்கள் உற்பத்தி செய்து குவித்த சரக்குகள்தான் நமது நாட்டின் செல்வங்கள் ஆகும். விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களே சரக்குகள் எனப்படும். உணவுப் பொருட்கள்,ஆடை அணிகலன் உள்ளிட்ட மக்கள் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களுமே சரக்குகள் தான். இவைதான் இந்திய நாட்டின் செல்வங்கள் இவற்றின் பண மதிப்பு, பல லட்சம் கோடி ரூபாய் இந்த செல்வங்களை உற்பத்தி செய்வதில், உழைப்பாளி மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடுகிறார்கள். ஆலைகளில், தொழிற்சாலைகளில், விளைநிலங்களில் உழைப்பாளிகள் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். சுமைப்பணித் தொழிலாளர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், அரசு ஊழியர், ஆசிரியர் உள்ளிட்ட ஏனைய உழைப்பாளிகள் மறைமுகமாக ஈடுபடுகிறார்கள்.

உற்பத்தியில் ஈடுபடும் இவர்கள்,தங்களின் உழைப்புக்காக ஊதியம் பெறுகிறார்கள். ஆனால் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடாத உழைக்க இயலாத ஒரு பகுதியினரும் மக்கள் திரளில் உண்டு. நோயாளிகள், முதியவர்கள், குழந்தைகளே அந்தப் பகுதியினர். உழைக்க இயலாத. ஊதியம் பெற வாய்ப்பு இல்லாத இவர்களைப் பராமரித்து வருவது யார்?

உழைக்கும் மக்கள் உருவாக்கித் தந்த ஒட்டுமொத்தச் செல்வத்தின் ஒரு பகுதிதான். உழைக்க இயலாத இந்த மக்களை பராமரித்து வருகிறது. அதாவது, ஒவ்வொரு உழைப்பாளியும் தனக்காக உழைப்பதோடு,உழைக்க இயலாத பகுதியினரின் பராமரிப்புக்காகவும் அன்றாடம் உழைத்து வருகிறார்.

உழைப்பாளிகள் தாங்கள் உழைத்த காலத்தில் உழைக்க இயலாத பகுதியினருக்குக் கொடுத்த பங்கை, தங்களின் வயோதிக காலத்தில், அடுத்த தலைமுறை உழைப்பாளிகளிடமிருந்து (பண மதிப்பாக) திரும்பப் பெறுகிறார்கள். இதுதான் ஓய்வூதியம். இப்போது சொல்லுங்கள். கொடுத்ததைத் திரும்பப் பெறுவது சலுகையா உரிமையா? உரிமைதானே! (நன்றி -"தீக்கதிர்")

●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம் (பதிவு எண் 237/84)

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


கடித எண்: 10/2025 நாள்: 15.05.2025

பெறுநர்:

நிதித்துறைச் செயலாளர்

தமிழ்நாடு அரசு

தலைமைச்செயலகம்

சென்னை-600 009

ஐயா,

பொருளர்: தமிழ்நாடு அரசு ஊழியர் - புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2021 - 30.06.2025 தொகுப்பு முடிகிறது - புதிய தொகுப்பு அமுல்படுத்திடவும், குறைகளை களைந்து கட்டணமில்லா சிகிச்சை உறுதிப்படுத்த கோருதல் - தொடர்பாக.

தமிழக அரசு ஊழியர், ஆசிரியர், ஓய்வூதியர் பெறுபவர்கள் பலன் பெறும் வகையில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை தமிழக அரசே ஏற்று நடத்திட வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று கடந்த 2021 முதல் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் காலம் வருகிற 30.06.2025 முடிவடைகிறது. எனவே, அடுத்து இத்திட்டம் புதுப்பிக்கப்படும் நிலையில்

ஏற்கனவே உள்ள திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களையப்பட்டு ஊழியர் நலன் சார்ந்த கட்டணமில்லா மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தை உறுதிப்படுத்திட கேட்டுக்கொள்கிறோம்.

இத்திட்டம் நான்கு ஆண்டுகள் என்ற முறையில் கட்டணமில்லா சிகிச்சை வழங்க வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த திட்டத்தில் உள்ள அரசு ஊழியர், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது ஏராளமான இடையூறுகளால் பாதிக்கப்படுகிறார்கள். அரசு ஆணையில் உள்ளவாறு பயன்பெறும் வகையில் நடைமுறை சிக்கல்களை களைந்திட வேண்டும்.

1. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்படும் நோயாளிகள் இடர்பாடின்றி சிகிச்சை பெற இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மருத்துவமனைக்கு சென்று நோயாளிகளை சந்திக்க ஆவன செய்திட வேண்டும்.

2. காப்பீடு பெறுவதற்கான முறையீட்டு அலுவலர்களை எங்கள் சங்க நிர்வாகிகள் தொடர்பு கொள்ளும்போது தடையின்றி பேசவும், சந்திக்கவும் ஆவண செய்ய வேண்டும்.
3. நான்காண்டுகளுக்கு ரூ.5,00,000/- வரை பெறலாம் என்ற உச்சவரம்பை அனைத்து சிகிச்சைகளுக்கும் , சிகிச்சைக்கான முழு தொகையும் எவ்வித தடையுமின்றி பெற்றிட வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட வேண்டும்.
4. அறுவை சிகிச்சைக்கு மட்டும் இத்திட்டம் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மூக்கு, வயிறு, கால், கைகளில் உள்ள கட்டிகள் அகற்றுவது மகப்பேறு அறுவை சிகிச்சை போன்ற பல அறுவை சிகிச்சைகளுக்கு பொருந்தாது என மறுக்கப்பட்டுவருகிறது. எனவே, அனைத்து அறுவை சிகிச்சைகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
5. அரசு ஊழியர்களிடம் அதிகமான தொகைகள் வசூலித்த மருத்துவமனைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் Single Bill System அடிப்படையில் பேக்கேஜ் என்ற முறையில் 20% மட்டுமே வழங்கப்படுகிறது. இதில் நோயாளிகளுக்கு ஒரு ரசீதும், காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு ரசீதும் அனுப்பப்பட்டுவருகிறது. இது போன்ற நடைமுறைகள் களையப்பட வேண்டும்.
6. மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை அனைவருக்கும் கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
7. மருத்துவமனையில் உள் நோயாளியாக இருக்கும் போது பெற முடியாத தொகை மீளப்பெறும் வகையில் காப்பீடு நிறுவனத்திற்கு அனுப்பும் போது நீண்ட காலதாமதம் ஆகிறது. அதன்மீது விரைவாக உரிய நபர்களுக்கு சரியான தகவல்களை உடனுக்குடன் கொடுப்பதற்கும் தொகையை காலதாமதமின்றி பெறுவதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.
8. கார்பஸ் தொகை பெறுவதற்காக கருவூல ஆணையரகம் மாநில உயர்மட்ட குழுவிற்காக மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது. இந்த காலதாமத்தை விரைந்து முடிப்பதற்கு தனி பிரிவுகள் ஏற்படுத்திட வேண்டும்.
9. அரசு மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது இத்திட்டப் பயனாளிகளுக்கென தனியான வார்டு, ஒதுக்கப்பட்டு அதற்கான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தனி கட்டமைப்பை உருவாக்கிட வேண்டும்.
10. இத்திட்டத்தில் உள்ள நடைமுறை குறைகளை களைந்திட மாவட்ட அளவிலான குறை களையும் கூட்டத்தை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், மாநில அளவிலான கூட்டத்தை ஆண்டிற்கு ஒருமுறையும் கூட்டப்பட்டு ஊழியர்களின் பிரதிநிதிகள் சார்பாக சங்க நிர்வாகிகள் கருத்துகள் பெறப்பட வேண்டும்.

மேற்கண்ட குறைகளை களைந்து 01.07.2025 முதல் அமுல்படுத்தப்படும் இத்திட்டம் ஊழியர் நலன்பயக்கும் கட்டணமில்லா சிகிச்சையாக உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமென கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்

**(மு. பாஸ்கரன்)**
மாநிலத்தலைவர்
செல்.9442409442

**(மு. சீனிவாசன்)**
பொதுச்செயலாளர்
செல்.9443845602

கட்டுரை

# ஜாக்டீ நினைவுகள்

**- மு.சீனிவாசன்**

1988 ஜூன் 22 முதல் ஜூலை 22 வரை நடைபெற்ற மத்திய அரசு ஊழியருக்கு இணையான ஊதியம் கேட்டு காலவரையற்ற வேலைநிறுத்தப்போராட்டம் தமிழகத்தின் அரசு ஊழியர் ஆசிரியர்களின் தலையெழுத்தை மாற்றிய போராட்டம். 1947ல் வைத்த கோரிக்கை 41 ஆண்டுகளுக்கு முன்பாக வைத்த கோரிக்கை, நீரு பூத்த நெருப்பாக 1988ல் ஜூன் 22ல் துவங்கிய காலவரையற்ற வேலைநிறுத்தம் கொழுந்துவிட்டு எரிந்தது. சிறை, தொலைதூர இடமாற்றம், அத்தியாவசிய பராமரிப்புச்சட்டம், பத்திரிக்கைகள் அரசு தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டது. துரோக சக்திகள் ஊக்குவிக்கப்பட்டன. நிர்பந்தம் காரணமாக வேலை நிறுத்தத்தில் குதித்து எப்போது ஓடுவது என்று நேரம் பாத்திருந்த சங்கம், சர்க்காரின் துரோக ஒப்பந்தம், துரோக ஒப்பந்தம் தீவைத்து கொழுத்தப்பட்டது.

சம்பள விகிதங்களை பொறுத்தமட்டில் இந்தியாவிலேயே, தென் மாநிலங்களிலேயே மிகக்குறைவாக உள்ளது. ஆனால் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கிட தமிழக அரசிடம் நிதி இல்லை என காரணம் சொல்லப்பட்டது. கேட்பதுதான் கேட்கிறார்கள், சம்பளத்தை சற்று உயர்த்தி கேட்டால் கூட சரியாக இருக்கும், மத்திய அரசு ஊழியருக்கு இணையான சம்பளத்தை கேட்பது நியாயமா? இது நடக்குமா? வீணாக ஊழியர்களை போராட்டத்தில் ஈடுபட வைத்து சிரமத்திற்கு உள்ளாக்குகிறார்கள் என போராட்டத்தை ஏளனம் பேசிய துரோக சங்கங்கள்.

ஜூன் 22ல் போராட்டம் துவங்கிய முதல் நாளிலேயெ பெருவாரியான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். பல சங்கங்கள் இடையே வந்து கலந்துகொண்டனர். பிறகு தானாக அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி சம்பள உயர்வு மற்றும் இடைக்கால நிவாரணம் ரூ.70 மட்டும் பெற்று ஒப்பந்தம் போட்டுக்கொண்டன. போராட்டக்களத்தில் உள்ள ஊழியர்கள் அந்த ஒப்பந்தத்தை தீயிட்டு கொளுத்தினார்கள். அரசின் அச்சுறுத்தல் தீவிரமடைந்தது. 2500 தற்காலிக ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள், ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள் சிறையிலடைக்கப்பட்டனர், 10,000க்கும் மேற்பட்டோர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர். போலீஸ்படையை கண்மூடித்தனமாக ஏவிவிட்டது. அலுவலகங்களில் ஒன்று கூடவோ, நோட்டீஸ் கொடுக்கவோ தடை விதிக்கப்பட்டது, ஒன்று கூடிய ஊழியாகளை குதிரைப்படையைக்கொண்டீ விரட்டியடிக்கப்பட்டனர். பேரணி மறுக்கப்பட்டது, போராட்டத்தை உடைக்க நீதிமன்றங்களும் பயன்படுத்தப்பட்டது, தலைவர்கள், முன்னனி ஊழியர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்்யாக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். (போராட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட ஜாக்டீ ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள் தோழர்கள். மயில்சாமி, ஆ.சு.அப்பன், சாந்தாராம், ராஜமணி உள்ளிட்ட தோழர்களின் தியாகங்கள் இன்று நமது கைகளில் மத்திய அரசுக்கு இணையான ஊதியமாக மாதாமாதம் கிடைத்துக்கொண்டிருக்கின்றது.) தற்காலிக

பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்ய அங்கீகாரம் பெறப்பட்டது. தொலைக்காட்சி, வானொலி திட்டமிட்டு எதிர்பிரச்சாரம் செய்யப்பட்டது. ஊழியர்களுக்கு எதிராக பொதுமக்களை தூண்டிவிட பயம்படுத்தப்பட்டது. ஜாக்டீ பேரமைப்பு உறுதியாக களத்தில் நின்றது.

ஜாக்டீ போராட்டத்திற்கு ஆதரவாகவும், போராட்டத்தை உடைக்க ஒப்பந்த ஊழியர்களை நியமன் செய்யும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க மாh்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தொழிற்சங்க மையம், ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம்; ஆகிய அமைப்புகள் மக்களைத்திரட்டி மறியல் மற்றும் தர்ணா போராட்டத்தை நடத்தினர். ஒரு சில மாவட்டங்களில் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மறியல் போராட்டத்தை நடத்தின. ஒரு சில மாவட்டங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அகில இந்திய தொழிற்சங்ச காங்கிரஸ் மறியல் போராட்டத்தை நடத்தின. மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், அகில இந்திய காப்பீட்டு கழக ஊழியர் சங்கம், ஆகிய அமைப்புகள் பேரணி மற்றும் தர்ணா போராட்டங்களை நடத்தின. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர்.சுகுமால்சென் பாராளுமன்ற உறுப்பினர் செய்தியறிந்து, தந்தி மூலம் தகவல் கொடுத்து ஜூன் 29 விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார். சென்னை கேரள சமாஜத்தில் எழுச்சிமிகு கூட்டத்தில் பேருரையாற்றினார். தமிழகம் முழுவதும் வேலைநிறுத்தம் நடைபெறும் பல மாவட்டங்களுக்கு கோவை, சேலம், ஈரோடு, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய நகரங்களுக்குச்சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மத்தியில் எழுச்சியுரையாற்றினார்.ஜூலை 5 சென்னை ராஜ்பவனில் மேதகு ஆளுநரை சந்தித்து கோரிக்கைகளின் நியாயத்தையும், ஊழியர்களின் எழுச்சியையும் எடுத்துக்கூறி அரசு உடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தினார். துணைத்தலைவர் தோழர்.கே.வி.தேவதாஸ் சென்னை, வடஆற்காடு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கேரள தலைவர்கள் டி.கே.பாலன், கே.வி.ராஜேந்திரன், ஆனந்தன், வாசு, குஞ்சுமுகமது, ஆகி தோழர்கள் நீலகிரி, கோவை, சென்னை, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சிதம்பரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்தனர்.

30 நாள் வீரம்செறிந்த போராட்டம் 31வது நாள் சென்னையை நோக்கி மறியல் போராட்டத்திற்கு லாரியிலும், பேருந்திலும் சென்னையை நோக்கி பல்லாயிரக்கணக்கான ஊழியர்களும், ஆசிரியர்களும் படையெடுத்தனர். காவல்துறை இரயில்நிலையம், பேருந்துநிலையம் என பார்த்த இடங்களிலெல்லாம் கைதுசெய்தனர். அவற்றையெல்லாம் தாண்டி பல்லாயிரக்கண்கானோர் சென்னை அண்ணா சாலையில் திரண்டனர். ஊழியர்களை அப்புறப்படுத்த தடியடி, கண்ணீர் புகை குண்டு, குதிரைப்படை என அனைத்து முயற்சிகளையும் காவல்துறை மேற்கொண்டு தோல்வியடைந்தது. வேறு வழியின்றி தலைவர்களிடம் முறையிட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களை காவல்துறையே அரசு பேருந்து மூலம் நேரு திடலுக்கு அழைத்துச்சென்றனர். அங்கு அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவுகளை ஏற்றுக்கொண்டு வரலாற்று சிறப்புமிக்க போராட்டம் முடிவுக்கு வந்தது. நமக்கான மத்திய அரசுக்கு இணையான ஊதியம் உத்தரவாதமானது.

●

©
Government of Tamil Nadu
2025

MANUSCRIPT SERIES

## FINANCE [Procurement Cell] DEPARTMENT
## G.O.Ms.No.103, Dated 05th May 2025.

*(விசுவாவசு, சித்திரை-22, திருவள்ளுவர் ஆண்டு-2056)*

<u>**ABSTRACT**</u>

**ADVANCE – Festival Advance to Government Employees** – Enhanced - Orders - Issued.

---

**Read:-**

G.O.Ms.No.240, Finance (Salaries) Department, Dated: 02-08-2019.

**-oOo-**

**ORDER**:

In the Government Order read above, orders have been issued directing that the Festival Advance payable to the Government employees, Teachers, Teaching and Non-Teaching Staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance be enhanced from Rs.5,000/- to Rs.10,000/-.

2. In the Budget Session 2025-2026, the Hon'ble Chief Minister has announced various welfare announcements to Government employees in the Legislative Assembly under Rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules and one of the announcement is as follows:-

> "அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்."

3. The Government after careful consideration, direct that the Festival Advance payable to the Government employees, Teachers, Teaching and non-Teaching staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance be enhanced from Rs.10,000/- to Rs.20,000/- (Rupees Twenty Thousand Only). There shall be no change in the existing procedure for sanction and recovery of Festival Advance.

4. These orders shall take immediate effect and apply to festivals to be celebrated after the date of issue of this order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

To
All Secretaries to Government, Chennai-600 009.
All Departments of Secretariat (OP/Bills), Chennai-600 009.

The Secretary, Tamil Nadu Legislative Assembly, Chennai-600 009.
The Secretary to the Governor, Chennai-600 022.
The Comptroller, Governor's Household, Raj Bhavan, Chennai-600 022.
The Governor's Secretariat, Raj Bhavan, Guindy, Chennai-600 022.
All Departments of Secretariat, Chennai-600 009.
All Heads of Departments.
All Public Sector Undertakings and Statutory Boards.
All District Collectors / All District Judges / All Chief Judicial Magistrates.
The Accountant General (A&E) Chennai-600 018.
The Accountant General (Audit-I) Chennai-600 018.
The Accountant General (Audit-II) Chennai-600 018.
The Accountant General (CAB) Chennai-600 009 / Madurai.
The Director of Treasuries and Accounts, Chennai-600 035.
All Pay and Accounts Officers.
All Treasury Officers / Sub-Treasury Officers.
The Chief Internal Auditor and Chief Auditor of Statutory Boards, Chennai-600 002.
The Chairman / Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai-600 003.
The Registrar, High Court, Chennai-600 104 / Madurai Bench of Madras High Court, Madurai.
All Commissioners of Tribunal for Disciplinary Proceedings.
The Registrars of all Universities.
The Commissioner, Greater Chennai Corporation.
The Commissioner of All Corporations.

**Copy to:**

The Secretary to the Hon'ble Chief Minister, Chennai-600 009.
The Chief Minister's Office, Chennai-600 009.
The Special Personal Assistant to Hon'ble Finance Minister, Chennai–600 009.
The Senior Principal Private Secretary to the Chief Secretary to Government, Chennai-600 009.
The Senior Principal Private Secretary to Principal Secretary to Government, Finance Department, Chennai-600 009.
All Officers in Finance Department, Chennai-600 009.
All Sections in Finance Department, Chennai-600 009.
All Recognised Associations.
Stock File / Spare Copies.

**// Forwarded : By Order //**

**SECTION OFFICER.**

05/05/2025

# பயிற்சி வகுப்புகள்

## அரியலூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரியலூர் மாவட்டத்தில் சார்பாக அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட ,வட்டக்கிளை மற்றும் முன்னணி ஊழியர்களுக்காண பயிற்சி அரங்கம் மாவட்ட தலைவர் தோழர் என்.வேல்முருகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது மாவட்ட செயலாளர் தோழர் ஷேக் தாவூத் வரவேற்புரையாற்றினார் சங்கம் கடந்து வந்த பாதை என்ற தலைப்பு மாவட்ட தலைவர் என் வேல்முருகனும் அரசு ஊழியர் சந்திக்கின்ற சவால்களும் எதிர்கால திட்டமிடலும் என்ற தலைப்பில் மாநில செயலாளர் தோழர் செ. பிரகாஷ் கருத்துரை வழங்கிய பயிற்சி அரங்கத்தை நடத்தினார்கள் கலந்துகொண்டு புதிய தோழர்கள் சங்கம் எந்த ஒரு நிகழ்விலும் தன்னை பாதுகாக்கும் என்ற உணர்வை பெற்றதாகவும் கலந்து கொண்ட ஊழியர்கள் சங்கப் பணியை மேலும் சிறப்பாக செய்வோம் என்று உத்வேகத்துடன் தெரிவித்தனர் நிறைவாக தோழர் பைரவன் நன்றி உரை கூறினார்.

## இராமநாதபுரம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக 17.05.2025 சனிக்கிழமை காலை 11 மணி அளவில் இராமேஸ்வரம் நேஷனல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாவட்ட தலைவர் தோழர் இல.விஜயராமலிங்கம் தலைமையில் பயிலரங்கம் நடைபெற்றது. கடந்து வந்த பாதைகள் என்ற தலைப்பில் மேனாள் மாவட்ட செயலாளர் தோழர் பெ.சேகர் அவர்களும் சங்க வரலாறும் தலைமை பண்பும் என்ற தலைப்பில் மேனாள் மாநில பொதுச் செயலாளர் தோழர் ஆ.செல்வம் அவர்களும் எதிர்கால சவால்களும் போராட்டங்களும் என்ற தலைப்பில் மாவட்ட செயலாளர் தோழர் ஹ.அப்துல் நஜ்முதீன் அவர்களும் பயிலரங்க வகுப்பினை நடத்தினார்கள். அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுக்கான பயிற்சியை நடத்தியது மிகச் சிறப்பாகவும் எழுச்சியாகவும் இருந்தது என வந்திருந்த புதிய தோழர்கள் சொன்னது மாவட்ட நிர்வாகிகளுக்கு மிகுந்த உத்வேகத்தை அளித்தது மாவட்ட நிர்வாகிகள் N.வேலுச்சாமி, கே.முத்துசாமி, மு.ரோஸநாரா பேகம், R.சரத்மோகன், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் துறை வாரிச் சங்க தோழர்கள் கலந்து கொண்டனர் நிறைவாக மாவட்ட துணைத் தலைவர் தோழர் ப.சரவணன் நன்றியுரை ஆற்றினார்.

## தூத்துக்குடி




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தூத்துக்குடி மாவட்டம் சார்பாக சிறப்பு பயிலரங்கும் மாவட்ட தலைவர் சோ.மகேந்திர பிரபு தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் தோழர் ஜெ. உமாதேவி வரவேற்புரையாற்றினார். அமைப்பு ,நிர்வாகம், அரசியல் இவற்றுள் ஊழியர்கள் என்ற தலைப்பில் மேனாள் மாநிலத் துணைத் தலைவர் சி.எஸ். கிறிஸ்டோபர் மேனாள் மாநில துணைப் பொதுச் செயலாளர் நா. வெங்கடேசன் மாநில துணைத்தலைவர் கே.முருகன், மாநிலச் செயலாளர் தோழர் இ.மைக்கேல் லில்லி புஷ்பம் கருத்துரை வழங்கினர்கள் இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் ஞானராஜ், பேச்சியம்மாள், தமிழரசன்,

அன்புச்செல்வன், சுவாமிநாதன், மகாராஜன், செல்லத்துரை,ராஜ முருகேஸ்வரன், மகேஸ்வரி, மாநில செயற்குழு உறுப்பினர் அ.பிரான்சிஸ் பாபு உள்ளிட்ட மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் கருத்தரங்கின் நிறைவாக மாவட்ட பொருளாளர் ஆர்.சாம் டேனியல் ராஜ் நன்றி உரை கூறினார்.

## தஞ்சாவூர்




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தஞ்சாவூர் மாவட்டம். சார்பாக 17.05.2025 மாவட்ட அளவிலான பயற்சி வகுப்பு பயிலரங்கம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பெசன்ட் அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் ஆ. செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைத்தலைவர்கள் தோழர்கள் ஏ.ஆர்.கவிதா, ஆ.தமிழ்வாணன், பா.பார்த்தசாரதி, மாவட்ட இணைச்செயலாளர்கள் தோழர்கள் ஜி.கருணாநிதி, பொ.வெங்கடேசன், முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் தோழர் இரா.இரமேஷ் வரவேற்புரை ஆற்றினார். "சங்கத் தேவையும், உறுப்பினர் பங்களிப்பும்" என்ற தலைப்பில் தமுஎகச துணைப் பொதுச்செயலாளர் தோழர் களப்பிரன் கருத்துரை வழங்கினார். மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆ.ரெங்கசாமி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர் ஜி.இராதாகிருஷ்ணன் நன்றி கூற பயிலரங்கம் இனிதே நறைவுற்றது.

## நாமக்கல்



நாமக்கல் மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. மாவட்ட தலைவர் ந.தனசேகரன் தலைமையேற்றார்.மாவட்ட செயலாளர் இரா.முருகேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்." சங்க வரலாறு பயில்வோம் வெல்வோம்"என்ற தலைப்பில் தமிழ்நாடு தமிழ்நாடு அனைத்து துறை ஊழிய சங்கம் மாவட்ட தலைவரும், அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்ட தலைவருமான K.S.இளங்கோவன் அவர்கள் பயிற்சியளித்தார். இறுதியாக அரசு ஊழியர் சங்க மாவட்ட இணை செயலாளர் அவர்கள் நன்றி கூறி முடித்து வைத்தார்.

## திருவள்ளுவர்




தமிழ்நாடு அரசு ஊழியச் சங்கம் திருவள்ளுவர் மாவட்டத்தின் சார்பாக தமிழ்நாடு வருவாய்துறை அலுவலக சங்கு கட்டிடத்தில் 17.05.2025 பயிலரங்கம் மாவட்ட தலைவர் தோழர் க. திவ்யா தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் தோழர்.க. வெண்ணிலா வரவேற்புரையாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் தோழர் தே.வாசுகி துவக்கவுரையாற்றினார் அன்றும் இன்றும் அரசு ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை மாநிலத்தலைவர் தோழர் சி.காந்திமதி நாதனும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை மாநிலத் துணைத் தலைவர் ஏ. மணிகண்டன் அரசின் நிலைப்பாடும் அரசு ஊழியரின் நிலை என்ற தலைப்பிலும் விரிவாக கருத்துரை ஆற்றினார்கள் இந்த நிகழ்வில் குணசேகரன், மெல்கிராஜா சிங், மேகநாதன்,திலகவதி உள்ளிட்டு மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிளை பெருந்திரளாக கலந்து கொண்டனர் நிறைவாக மாவட்ட பொருளாளர் ஏ.மணிகண்டன் நன்றி உரை கூறினார்.

## திருச்சி




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருச்சி மாவட்டத்தின் சார்பாக பயிற்சி வகுப்பு மாவட்ட தலைவர் தோழர் கா.பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது அந்த நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் மு.பாஸ்கரன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு. சீனிவாசன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொருளாளர் தோழர் சா.டானியல்ஜெய்சிங் மாநில துணைத் தலைவர் மு. செல்வராணி கலந்துகொண்டு பயிற்சி வகுப்பு நடத்தினார்கள் நிறைவாக மாவட்ட பொருளாளர் சிவசங்கர் நன்றி உரை கூறினார் இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் சோ. நவநீதன் உள்ளிட்ட மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தின் சார்பாக 24/05/2025 சனிக்கிழமை காலை மாவட்ட தலைவர் பி. பாண்டிதுரை தலைமையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது மாவட்டச் செயலாளர் தோழர் கா.கருப்பையா பயிற்சியின் நோக்கம் குறித்து பேசினார் மாநில செயலாளர் தோழர் க. நீதி ராஜா சங்கக் கடமையும் உணர்வும் என்ற தலைப்பிலும் ,இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட தலைவர் டி.என்.தேவா இன்றைய இந்தியாவும் தொழிலாளர் நிலைமையும் என்ற தலைப்பிலும் தமிழ்நாடு சங்க மாநிலத் துணைத் தலைவர் மு.செல்வ ராணி மகளிரின் சங்கப் பணியில் மூலம் சமூக மாற்றம் என்ற தலைப்பிலும் தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆ. அம்சராஜ் சிங்க நடை போட்டு சங்க பணியாற்றுவோம் என்ற தலைப்பில் உரையாற்றினார்கள் இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள்,முன்னணி ஊழியர்கள், துறை வாரிச் சங்கத்தின் நிர்வாகிகள் பங்கேற்றனர் பயிற்சி வகுப்பு சிறப்பாக நடைபெற்றது நிகழ்வின் நிறைவாக மாவட்ட பொருளாளர் என்.முருகானந்தன் நன்றியுரை கூற நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

## மதுரை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்டம் மாநில மைய முடிவின்படி 17.05.2025 சனிக்கிழமை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டடத்தில் பயிலரங்கம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் இரா.தமிழ் தலைமை தாங்கினார் மாவட்டச்செயலாளர் க.சந்திரபோஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். அரசு ஊழியரின் கணக்கும், அரசாங்கத்தின் கணக்கும் என்ற தலைப்பில் மாநிலச்செயலாளர் க.நீதிராஜா, தொழிலாளர் வர்க்கத்தின் கடமை என்ற தலைப்பில் இந்திய தொழிற்சங்க மையம். மாவட்டச்செயலாளர் இரா.லெனின் பயிற்சி வகுப்பு. எடுத்தார் நமது சங்கத்தின் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர் மாவட்டப்பொருளாளர் ஆ.பரமசிவன் எடுத்தார் நன்றி உரை கூறினார்.

## கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கரூர் மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் பொன் ஜெயராமன் அவர்களின் தலைமையில் பொது வேலை நிறுத்தத்துக்கான கருத்தரங்கம் நடைபெற்றது பாரதி புத்தக ஆலயம் சார்பாக தோழர் ஆர்.பத்ரி அவர்கள் சிறப்புரையாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எம்.எஸ். அன்பழகன் வாழ்த்துரை வழங்கினார் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட தலைவர் சி. ஜீவானந்தம் மாவட்ட செயலாளர் தோழர் சி. முருகேசன் அவர்கள் வேலைநிறுத்தம் குறித்து கருத்துரை வழங்கினர் தோழர் சுப்பிரமணியன் நன்றி உரை கூற கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

## கிருஷ்ணகிரி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பாக தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்ட தலைவர் தோழர் பி. சந்திரன் அவர்களின் தலைமையில் பயிலரங்கம் நடைபெற்றது மாவட்ட செயலாளர் தோழர் சி. கல்யாணசுந்தரம் வரவேற்பு உரையாற்றினார் மேனாள் மாநில தணிக்கையாளர் தோழர் ஆர்.நடராஜன் துவக்கவுரை ஆற்றினார் அரசின் கொள்கைகளும் கோரிக்கைகளின் நிலையும் என்ற தலைப்பில் மேனாள் மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு சங்க வரலாறு கற்போம் வெல்வோம் என்ற தலைப்பில் மாநில துணை பொதுச்செயலாளர் தோழர் அண்ணா. குபேரன் கருத்துரை ஆற்றினர்கள் இந்த நிகழ்வில் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர் நிறைவாக மாவட்ட பொருளாளர் தோழர் மா.நந்தகுமார் நன்றி உரை கூறினார்.

## திருப்பூர்




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பூர் மாவட்டத்தின் சார்பாக வேலை நிறுத்த ஆயத்த கருத்தரங்கம் மாவட்ட தலைவர்(பொ) தோழர் எஸ். பாண்டியம்மாள் தலைமையில் நடைபெற்றது மாவட்ட இணைச்செயலாளர் தா. வைரமுத்து வரவேற்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் தோழர் மா. பாலசுப்பிரமணியன் விளக்க உரையாற்றினார் வேலை நிறுத்தம் ஏன் எதற்கு என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் ஆ.அம்சராஜ் கருத்துரை ஆற்றினார் இந்த நிகழ்வில் அந்தோணி ஜெயராஜ், மதன்குமார், புஷ்பவல்லி,ராமன், சோமலிங்கம்,ராணி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் வட்டக்கிளை நிர்வாகிகள் முன்னணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர் நிறைவாக மாவட்ட பொருளாளர் எஸ். முருகசாமி நன்றி உரை கூறினார். ●

# பணி நிறைவு பாராட்டு

## ஆறில் இருந்து அறுபது வரை

காமக்காபட்டி...!
வைகை அணை
நீர்நாவால்
செமித்தது போக
சேமிக்கவிட்ட
குக்கிராமம்!

ஆண்டி- சிட்டம்மாள்
இணையர்
ஓர் 'சிவப்பு
சித்தாந்த செல்வத்தை
ஈன்று புறந்தந்த
ஈர மண்ணும் இதுவே!

நன்றிக் கடனாய்
தந்தை பண்படுத்திய
இல்லறக் கழனியில்
நம்பிக்கை வித்தாய்
நடப்பட்ட நீ...
ஆலாய்த் தழைத்தோங்கி
உற்றார் - உறவினரை
பழுதின்றிப் படர்ந்து
விழுதூன்ற வைத்தாய்!

'வாடிய பயிரைக்
கண்ட போதெல்லாம்
வாடிய' வள்ளலாராய்
ஆறு வயது
பிஞ்சுப் பிராயம் முதலே
கருணை வெள்ளம்
கசிந்தோடியது
உந்தன்
நெஞ்சகச்
சுனையெங்கும்!

கிட்டிக்கம்பு
'ஸ்டேரிங்' சுழற்றும்
உந்தன்
கால்சக்கர உந்து
குக்கிராமத்து
குடிசை தோறும் சென்று
குசலம் விசாரிக்கும்!

கேள்வி ஞானம் தந்த
கெட்டிக்காரத்தனம்...
அமிர்தாஞ்சன்,
மெட்டா சின்,
சைபால் டப்பா அடங்கிய
உந்தன்
அரைக்கால் டவுசர்
பைகள்
அவசர சிகிச்சைப் பிரிவாக
அவதாரம் எடுக்கும்!

பூச்சி - பொட்டு கடித்தால்
கடிவாய் கீறி கட்டுப்போட
கத்தி,முள்ளு வாங்கி
கனத்ததோர் ஊக்கு சூழ
அறுவை அரங்கமாகும்
உந்தன்
அரைஞாண் கயிறு
இடுப்பு!

கல்லூரிப்
பருவத்தில் கூட
அந்த
அடித்தட்டு மக்களின்
குடிலுக்குள்
நுழையும்போது
உந்தன்
கண்முகில் பொழிந்த
கருணை மழையில்
கடந்த காலத்தில்
நீ எழுதி அனுப்பிய
அஞ்சல்
அட்டைகளுக்கான
பதில் அட்டைகளும்,
ரோசமுடன்
அலைந்து வாங்கிய
ரேசன் அட்டைகளும்
நனைந்து போகுமாமே?

தோழனே!
உனக்கு
உயிர் ஊட்டிய தந்தையே
தன் உயிரையும் ஈட்டி
அரசு ஊழியனாய்
உன்னை
அவதரிக்க வைத்தார்!

பொதுப்பணியில்
குதுகூலம் கொண்ட
உனக்கு
அனுகூலமாய்
அரசு ஒதுக்கியது
பொதுப்பணித்துறையை!

அரசுஊழியர்கள் பால்
நீ கொண்ட
அணுகுமுறையும்,
அரவணைப்பும்
உன்னுள்
புதைந்து கிடந்த
தலைமைப் பண்பினைப்
புடம்போட்டுக் காட்டியது!

அரசு ஊழியர் சங்க
வரலாற்றில் அக்னி
பிரவேசம் செய்யாமல்
வட்டக் கிளை
செயலர் பதவியை எட்டிய
இளவட்டம் நீ ஒருவனே!

மாற்றுச் சங்க
கண்காணிப்பாளர்
ஒருவர்
பெண் ஊழியர் மீது
நோக்கு
வாக்கு
போக்கில்
சிறுமைச் சீண்டல்
செய்ததாக
வாய்மொழிப் புகார்
வைத்தார் அந்த சகோதரி!

தனிமனித
ஒழுக்கத் தவறுக்கு
கண்டன ஆர்ப்பாட்டம்
கைகூடும் முன்
ஊழியர் புகாரை
எழுத்து வடிவில்
வாங்கினாய்
சமயோசிதமாக!
இச் செயல்
பெண் ஊழியரை
மூளைச்சலவை செய்ய
முன்வந்த
மூர்க்கர் நெஞ்சில்
தார்க்கோல் பாய்ச்சியது!

பெண் ஊழியர்களின்
வெகுண்டெழுந்த
ஆர்ப்பாட்டத்தால்
நாடுகடத்தப் பட்டான்
அந்த
கேடுகெட்ட
கண்காணிப்பாளர்!

'வணக்கம் தோழர்' என்று
மாற்றுச் சங்கத்தாரையும்
மதிக்கும் உந்தன்
மனிதநேய மாண்பும்,
மந்திரப் புன்னகையும்
அச்சங்கத்தின்
அடலேறு பலரை
அரசுஊழியர் சங்கத்தில்
ஐக்கியமாக்கியது!

'மாதர் தம்மை
இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்த'
நீ
எரிதழலாய் எழுவாய்
என்ற
திண்ணிய எண்ணத்தில்
திமிர்ந்த ஞானச்
செருக்கோடு
திரண்டனர்
பெண் ஊழியர்கள்
ஊழியர் சங்க
அனைத்து வடிவ
போராட்டங்களிலும்!

சுயமாக முடிவெடுத்துச்
சுழல்வதோடு
மாநில - மாவட்டமையக்
கட்டளைகளை
சிரமேற்கொண்டு
செயல்படுவதே
மேற்கு வட்டக் கிளை!

உறுப்பினர்
சந்தா செலுத்தாமல்
உனக்காகவும்,
சங்கத்திற்காகவும்
உழைத்த
வட்டக் கிளைப்
பொறுப்பாளர்
டி.வி.எஸ் 50 யை
மறக்கவே முடியாது!

பசை வாளி
சுவரொட்டிகள்
துண்டு பிரசுரங்கள்
சங்கக் கொடிகள் தாங்கி
அது பயணிக்காத
மாவட்ட எல்லைகளே
இல்லை!

மாவட்ட செயற்குழு
விரல் நீட்டி
வினாக்கணைத்
தொடுப்பதைத் தடுக்க
இலக்குத் தாண்டும்
செயல்பாடுகளுக்கு
சிறகுமுளைக்க
வைப்பாய்!

வேலைப் பிரிவினை
செய்து கொண்டாலும்
விடுபட்டுப்போகும்
அலுவலகப் பகுதி கணித்து
கைரேகை தேயத்தேய
சுவரொட்டிகளை
ஒட்டினால் தான்
துயிலெழுமுன்
விழிகளில்!

ஊழியர்
விரோத முதல்வர்
ஜெயலலிதாவால்
அரசுஊழியர்
பணிநீக்கம்
செய்யப்பட்டபோது
கூட்டுத் தற்கொலைக்கு
முயன்ற குடும்பங்களின்
வாட்டம் போக்க
வசூல்
வேட்டை நடத்தினாய்!

வரலாற்றுச்
சான்று படைத்த
வசூல் வேட்டை கண்டு
வாயடைத்துப் போனர்
பலர்!

அனைத்துத்துறை
உயர் அதிகாரிகள்,
ஒப்பந்தக்காரர்கள்,
மனிதநேய
மாற்றுச் சங்கக்காரர்கள்,
போராட்டப்
புனிதம் அறிந்த
வணிகர்கள் எனப்
பெற்ற நன்கொடையில்
பாதிக்கப்பட்ட
போராளிகள்
மாதமாதம்
பிடித்தம் போகப்
பெற்ற ஊதியம்
பைசா குறைவின்றி
பைசல் செய்யப்பட்டது!

ஊழியர் சங்கத்திடம்
தமிழக
ஆட்சிப்பொறுப்பைக்
கொடுத்தால்
பொற்காலத்தேயே
புலர வைப்பர் என்ற
புரட்டுச்சங்கங்களின்
நையாண்டடிகளுக்குள்
மெய்மை
இல்லாமல் இல்லை!

'ஊழியர் சங்கத்தினர்
அலுவலகத்தில்
பேனா
பிடிக்கவேண்டிய
நேரத்தில்
பேனர் பிடித்து
பிரச்சாரம் செய்து
சங்க உண்டியலையும்
ஊதிய உண்டியலையும்
நிரப்புவர்!' என்ற
எதிர்மறை
இடக்குகளுக்கு
இடங்கொடாமல்
இரவோடு இரவாக
சங்கம் போல் அங்கமான
அலுவலகப்பணி முடித்து
கையொப்பமும்
வாங்குவாய்
அதிகாரிகளிடம்!

உன்னுடைய
அரசுக் குடியிருப்புடன்
கை குலுக்கும்
அலுவலகங்களுக்குப்
பிரச்சாரம்
மேற்கொள்ளும்போது
உனக்கான
மதிய உணவுத்
தொகுப்பை
பகுத்துண்ண ஓம்புவாய்!

காமக்காபட்டி
கத்திரிக்காயும்
முத்தனம் பட்டி
முருங்கையும்
பின்னிக் கிடக்கும்
சாம்பாரில்
ஊறிக்கிடக்குமடா
இரு ஊர் ஜனங்களின்
ஊற்றெடுக்கும் அன்பு!

காயப்பட்டு வரும்
கள்ளிக்காட்டு
ஜனங்களானாலும்
நேயம் தொட்ட
ஊழியர்
குடும்பங்கள் ஆனாலும்
குருதிக் கொடை
கொடுப்பதில்
குமண வள்ளல் நீ!

குருதிக் கொடையில்
உச்சந்தொட்ட
உந்தன் சாதனையை
அரசு
மதுரை மருத்துவமனை
இரத்தவங்கிப் பதிவேடு
சத்தம்போட்டு
முரசறையும் இன்றும்!

பரிமாறும் பந்தியில்
ஒரு வாளிச் சுக்காவை
உன் இலையில்
கவிழ்த்தாலும்
உண்ணுதற்கு
உப்பு - பருப்புக் கேட்கும்
சாகபட்சினி அல்லவா நீ!
உனக்கு எப்படி
இருமுறை
இதய அறுவை என்பது
விஞ்ஞான விசித்திரமே!

'சிட்டம்மா
சிடு சிடுன்னு
சீறி விழுந்தாலும்
எட்டுப்பட்டிக் கிராமத்துல
எவளாலும்
போட்டிபோட முடியாது
புள்ளக வளப்புல'
உன் அம்மாவை
இகழ்வது போல புகழ்ந்த
காமக்காபட்டி மண்ணே!
இன்று
உனக்குப் புகழ்சேர்த்த
மைந்தனைக்
காணவிடாது
எங்கு மறைத்தாய்
அந்த
அதிஷ்டம் கெட்ட தாயை?

1965 இல்
பள்ளி இறுதிவகுப்புச்
சான்றிதழோடு
நான் வெளியேறிய போது
உன் தாயின்
வயிறு குகையிருந்து
புறப்பட்டு வந்த
புலிக்குட்டி அல்லவா நீ!
இணைந்து
சங்கப்பணி ஆற்றுதற்கு
வயது வரம்பற்றது
என்பதை
'சேது' என்று
நீ என்னை
அழைக்கும்போது
சிந்தும்
அன்பின் வெளிப்பாடு
அன்னத்தூவி கொண்டு
வருடிக் கொடுக்கும்
என் இதயத்தை!

தாயுடன் கோபித்து
தனி உலை வைக்கும்
இளந்தோழன்,
வட்டிக்காரரிடம்
வருமானத்தை ஈந்து

அவனிடமே
மாத ஊதியம் பெறும்
வாழத்தெரியாத ஊழியன்
இவர்களையும்
வீடு சென்று தீர்வு சொல்ல
விட்டு வைப்பதில்லை நீ!

இறுதியில்...
சோல்னாப் பை
தூளி துயிலும்
பிஸ்கெட் பாக்கெட்
இடையே கசியும்
பிசிரில்லா
உனது தாயன்பு
பிணக்குகளையும்
கணக்குகளையும்
நேர் செய்து வைக்கும்!

நீ விதைக்கும்
வியூக வித்துக்குள்
வேரூன்றிக் கிடக்கும்
விவேகம்!
எங்கள் வீட்டுக்
கபிலனை
இலண்டனிலும்
உங்கள் வீட்டு
முகிலனைத் துபாயிலும்
சொந்தக் காலூன்றி
பொன்னுலகம்
சிருஷ்டிக்கத்
தன்மானம் தந்துள்ளன!

ஏன்...
நீ உறையும் வீடு கூட
ஊசலாட்டமில்லா உன்
ஒருமித்த முடிவால்
உருவானது தானே!

மதுரை
பொதுப்பணித்துறை
வளாகத்தில்
கழிப்பறை யாக
ஒழித்து ஓரங்கட்டப்பட்ட
கட்டிடத்தை
ஊழியர்கள்
கலந்துரையாடும்
'ஆசா' சங்கக்
களிப்பறையாக
தனி ஒருவனாய் நின்று
புதுப்பித்தது
வாசம் தரும்
வசந்த வரவேற்பு!

உன்னுடைய
வெகுஜன அரங்கப்
பயணிப்பில்
கல்லடைப்பும்,
நெஞ்சடைப்பும்
நீ அடைய வேண்டிய
உச்சத்திற்கு
ஊறு விளைவிக்க
விழைந்த போதும்....
ஊழியர்கள்
உன்பால் சுரந்த
அன்புநீர்ப் பெருக்கால்
அடைப்புகள்

உடைந்து நொறுங்க
வரலாறு பல கண்ட
அரசு ஊழியர் சங்கத்தின்;
'மாநிலப்
பொதுச்செயலாளர்'
'ஜாக்டோ - ஜியோ
ஒருங்கிணைப்பாளர்'
'அகில இந்திய
அரசு ஊழியர் சம்மேளன
தேசிய செயற்குழு
உறுப்பினர்'
'ஆசா'சங்க
மாநிலத்தலைவர்' என
உனைத் தேடிவந்த
பொறுப்புகள் அனைத்தும்
பெருமை தேடிக்
கொண்டன
என்பதே நிதர்சனம்!

தோழனே செல்வம்!
உன்னுடைய
ஆறாம் அகவை முதல்
அறுபதாம் அகவை வரை
நான்
பணி ஓய்வு பெறும் வரை
உன்னுடன் பயணித்து
சங்கப்பணி ஆற்றிய
தங்கத் தருணங்களை
நினைவு கூர்ந்து
கவிதை வடிவில்
பதிவிட்டுள்ளேன்.

உந்தன் குருதியில்
மண்டிக்கிடக்கும்
பாட்டாளி வர்க்க
உணர்வுகள்
விளிம்புநிலை மக்களை
வீறுகொண்டு எழச்செய்து
பாசிச சக்திகளை
வேரறுக்கும்
படைக்கலனாய்ப்
பரிணமிக்க
வாழ்த்துகிறேன்.



என்றும் அன்புடன்
**சேது**
**(பாரதி கண்ணம்மா)**
பார்க்டவுன்
மதுரை - 17
29.5.2025

**சுருக்கம்**

பொதுப் பணிகள் – 2025-2026-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது 28.04.2025 அன்று சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண் 110-இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – திருமணமான அரசு பெண் பணியாளர்கள் அவர்களது தகுதிகாண் பருவ காலத்தில் துய்க்கும் மகப்பேறு விடுப்பினை தகுதிகாண் பருவகால கணக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**மனிதவள மேலாண்மை (எஸ்) துறை**

**அரசாணை (நிலை) எண்.21,** 

**நாள் : 28.05.2025**
**விசுவாவசு, வைகாசி-14,**
**திருவள்ளுவர் ஆண்டு - 2056.**

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 28.04.2025 அன்று நடைபெற்ற 2025-2026-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாதகாலமாக இருந்த விடுப்பு 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்றும், ஆனால், தற்போதுள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்புக் காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்றும், இதன் காரணமாக அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் பல்லாயிரக்கணக்கான இளம்மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது என்றும், மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்துவரும் இந்த அரசு, அரசுப் பணிகளில் பணியாற்றி வரும் மகளிரின் பணி உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் பணியாளர்கள் மகப்பேறு விடுப்பு காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்றும் சட்டமன்றப் பேரவை விதிகளில் விதி 110-இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, பின்வருமாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

(i) திருமணமான அரசு பெண் பணியாளர்கள் தகுதிகாண் பருவ காலத்தின் போது துய்க்கும் மகப்பேறு விடுப்புக் காலம் அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

த.பி.பா.

(ii) சிறப்பு / தற்காலிக விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகாண் பருவ பணிக்காலம் (duty period) 28.04.2025 அன்று முடிவுறாதவர்களுக்கு இச்சலுகை பொருந்தும்.

(iii) சிறப்பு / தற்காலிக விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகாண் பருவ பணிக்காலம் (duty period) 28.04.2025-க்கு முன்பு முடிவுற்றவர்களுக்கு இச்சலுகை பொருந்தாது.

(iv) இது தொடர்பாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ற்கு உரிய திருத்தங்கள் பின்னர் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா. முருகானந்தம்,**
**தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்துத் துறைத் தலைவர்கள் (தலைமைச் செயலகத் துறை வழியாக).
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை / மதுரைக் கிளை.

நகல்:

முதலமைச்சரின் செயலாளர்-II, முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மனித வள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
மனித வள மேலாண்மை (நி.சீ.) துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
(தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வெளியிடுதல் குறித்து)
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், மனித வள மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.
(கோப்பு எண்.10378777எஸ்.1/2025)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
28/5/25

28/5/25

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com